## அலகு 10

# தேய்மானக் கணக்கியல்

### பொருளடக்கம்

10.1 அறிமுகம்
10.2 தேய்மானம் – பொருள் மற்றும் வரைவிலக்கணம்
10.3 தேய்மானம் நீக்க வேண்டியதன் நோக்கங்கள்
10.4 தேய்மானத்திற்கான காரணங்கள்
10.5 தேய்மானத்தின் இயல்புகள்
10.6 தேய்மானத் தொகையை நிர்ணயிக்கும் காரணிகள்
10.7 தேய்மானம் கணக்கிடும் முறைகள்
10.8 தேய்மானம் பதிவு செய்யப்படும் முறைகள்
10.9 விற்ற சொத்தின் மீதான இலாபம் அல்லது நட்டத்தைக் காணுதல்

### கற்றல் நோக்கங்கள்

மாணவர்கள்

- தேய்மானத்தின் பொருள் மற்றும் தேய்மானம் ஏற்படுவதற்கான காரணங்களைப் புரிந்து கொள்ளுதல்
- பல்வேறு தேய்மானக் கணக்கீட்டு முறைகளைப் புரிந்து கொள்ளுதல்
- பல்வேறு தேய்மானக் கணக்கீட்டு முறைகளை செயல்படுத்துதல் மற்றும் சொத்து கணக்கினை தயாரித்தல்

### நினைவு கூற வேண்டிய கருத்துகள்

தேய்மானக் கணக்கியல் கற்பதற்கு முன் கீழ்க்கண்டவற்றை நினைவு கூற வேண்டும்:

- நிறுவனத் தொடர்ச்சி கருத்து
- பொருத்துகைக் கருத்து
- நிலைச் சொத்தின் பொருள்
- புலனாகும் சொத்துகள் மற்றும் புலனாகாச் சொத்துகள்

HH4K6H

### தெரிந்து கொள்ள வேண்டிய முக்கிய சொற்கள்

- தேய்மானம்
- தேய்மான ஒதுக்கு
- இறுதி மதிப்பு / எறி மதிப்பு
- ஏட்டு மதிப்பு
- நேர்க்கோட்டு முறை
- குறைந்து செல் இருப்பு முறை



Accountancy Ch 10_TM.indd 218 25-01-2020 14:51:06

## 10.1 அறிமுகம்

**மாணவர் செயல்பாடு**

**சிந்தனைக்கு:** திரு. நிகல் என்பவர் ₹ 4,00,000 க்கு மகிழ்வுந்து ஒன்றினை வாங்கினார். நான்கு வருடங்களுக்குப் பிறகு, அதனை ₹ 4,00,000 க்கு மேல் விற்பதற்கு விரும்புகிறார். இது சாத்தியமா? ஏன் இது சாத்தியம் அல்லது சாத்தியமில்லை என நீங்கள் நினைக்கிறீர்கள்?

வணிக நிறுவனங்கள் தங்களுடைய வணிக செயல்களுக்காக சில நிலைச்சொத்துகளைப் பயன்படுத்துகின்றன. இவை கட்டடம், பொறிவகை மற்றும் இயந்திரம், வாகனங்கள், அறைகலன், அலுவலக உபகரணங்கள் போன்றவையாகும். இச்சொத்துகள் நீண்ட வாழ்நாளை கொண்டுள்ளன. சில ஆண்டுகள் சென்ற பிறகு இச்சொத்துகள் வணிகச் செயல்பாட்டிற்கான தங்கள் மதிப்பினை இழக்கின்றன. நிலைச் சொத்துகளை வாங்குவதும் அல்லது உருவாக்குவதும் ஒரு முதலினச் செலவாகும். எனவே, எந்த ஆண்டில் வாங்கப்பட்டதோ அந்த ஆண்டின் இலாப நட்டக் கணக்கிற்கு இந்த தொகையை மாற்ற முடியாது. ஆனால், ஒவ்வொரு ஆண்டும், அந்த ஆண்டில் பயன்படுத்தப்பட்ட மூலதன செலவில் ஒரு பகுதியினை அந்த ஆண்டிற்குரிய இலாப நட்டக் கணக்கிற்கு மாற்றுவதோடு மட்டுமல்லாமல் நிலைச் சொத்தின் மதிப்பிலிருந்தும் கழிக்கப்படுகிறது. பயன்பாட்டிற்கு உட்படுத்தப்பட்ட மற்றும் முடிவடைந்த காலத்திற்குரிய சொத்தின் அடக்கவிலையின் பகுதி அளவிடப்பட்டு கணக்கில் கொண்டு வர வேண்டும். இது தேய்மானம் எனப்படும். தேய்மானம் என்பது இலாபம் கணக்கிடப்படுவதற்கு முன் காட்டப்பட வேண்டிய தொகை. அது இலாப நட்டக் கணக்கில் பற்று வைக்கப்படுகிறது.

## 10.2 தேய்மானம் – பொருள் மற்றும் வரைவிலக்கணம்

நிலைச்சொத்தின் அடக்கவிலையை அதனுடைய பயனளிப்புக் காலத்திற்கு ஒதுக்கீடு செய்யும் செயல்முறை தேய்மானம் ஆகும். இது, ஒரு கணக்காண்டில் நிலைச்சொத்துகளிலிருந்து கிடைக்கக்கூடிய பயன்களுக்குரிய அடக்கவிலையை ஒதுக்கீடு செய்வது ஆகும்.

ஸ்பைசர் மற்றும் பெக்லரின் கூற்றுப்படி "தேய்மானம் என்பது ஒரு குறிப்பிட்ட காலத்தில், எக்காரணத்தாலும் ஏற்படும் ஒரு சொத்தின் பயனளிப்பு கால இழப்பைக் குறிக்கும் ஒரு அளவாகும்".

கார்ட்டரின் கூற்றுப்படி "தேய்மானம் என்பது எக்காரணத்தினாலும், ஒரு சொத்தின் மதிப்பிலுண்டாகும் படிப்படியான மற்றும் நிலையான குறைவே ஆகும்."

### 10.2.1 சொத்தின் பயனளிப்பு காலம்

பயனளிப்பு காலம் என்பது அ) ஒரு நிறுவனத்தில் எவ்வளவு காலத்திற்கு ஒரு நிலைச்சொத்து பயன்பாட்டில் இருக்கும் அல்லது ஆ) எத்தனை உற்பத்தி அலகுகள் அல்லது அதுபோன்ற அலகுகள் அந்தச் சொத்திலிருந்து பெறப்படும் என்ற எதிர்பார்ப்பை குறிக்கும்.

**உங்களுக்குத் தெரியுமா?**

இந்தியகணக்கியல் தரநிலைகள் (AS – 10) ன் படி, தேய்மானம் என்பது, சொத்தின் பயனளிப்பு காலத்தில், தேய்மானமாகக் கழிக்கக்கூடிய தொகையை முறையாக ஒதுக்கீடு செய்வதாகும். சொத்திலிருந்து கழிக்கக்கூடிய தேய்மானத் தொகை என்பது சொத்தின் உண்மை அடக்க விலை அல்லது அடக்கத்திற்கு மாற்றீடான இதர தொகையிலிருந்து இறுதி மதிப்பை கழித்த பின் கிடைக்கும் தொகை ஆகும்.

### 10.2.2 தேய்மானம் ஏற்படக்கூடிய சொத்துகள்

ஒரு கணக்காண்டிற்கு மேல் வணிகத்தில் பயன்படுத்தக்கூடிய நிலைச் சொத்துகளின் அடக்கவிலையை அதன் பயனுள்ள வாழ்நாள் காலத்தில் நீக்கப்பட முடியுமென்றால், அச்சொத்துகள் தேய்மானம் ஏற்படக்கூடிய சொத்துகள் ஆகும்.

உதாரணம்: கட்டடங்கள், இயந்திரம், வாகனங்கள், அறைகலன், கணினி மற்றும் உபகரணங்கள்.



Accountancy Ch 10_TM.indd 219 25-01-2020 14:51:06

இச்சொத்துகள் குறிப்பிட்ட பயனளிப்பு காலங்கள் மட்டுமே பெற்றுள்ளன. இவ்வகைச் சொத்துகள் வியாபாரத்தில் உற்பத்திக்காகவோ அல்லது பொருட்களை அளிப்பதற்காகவோ அல்லது நிர்வாக நோக்கத்திற்காகவோ பயன்படுத்தப்படுகின்றன. இவை மறுவிற்பனைக்கானவை அல்ல.

## 10.3 தேய்மானம் நீக்க வேண்டியதன் நோக்கங்கள்

கீழ்க்கண்ட நோக்கங்களுக்காக தேய்மானம் நீக்க வேண்டியிருக்கிறது.

**(i) சரியான இலாபம் அல்லது நட்டம் கண்டறிய**

பொருத்துகை கோட்பாட்டின்படி, ஒரு கணக்காண்டில் செய்த செலவுகளை, அந்தக் காலத்தில் ஈட்டிய வருமானத்துடன் பொருத்திப் பார்க்கப்பட வேண்டும். எனவே, வணிகத்தில் வருமானத்தை பெருக்குவதற்காக சொத்துகளைப் பயன்படுத்தும் போது, பயன்பாட்டிற்குரிய சொத்தின் அடக்கவிலை அதாவது, பயன்பாடு பெற்றதற்க்கேற்ப, ஏட்டின் மதிப்பில் ஏற்படும் குறைவு, வருவாயுடன் பொருத்திப் பார்க்கப்பட வேண்டும்.

**(ii) உண்மையான, மற்றும் நியாயமான நிதி நிலையை உணர்த்த**

நிலைச் சொத்துகளின் மீது தேய்மானம் நீக்கப்படும் போது, நிலைச் சொத்தின் ஏட்டு மதிப்பு அதன் தேய்மானத் தொகை அளவிற்கு குறைக்கப்பட்டு, மீதித் தொகை இருப்புநிலைக் குறிப்பில் காண்பிக்கப்படுகிறது. மீதமுள்ள தொகை அச்சொத்திலிருந்து இன்னும் பெறவேண்டிய பலன்களைக் குறிக்கிறது. குறைந்து செல்லும் இருப்பானது, நிலைச்சொத்தின் உண்மையான மதிப்பினை அதாவது, இன்னும் எழுதி நீக்கப்படாத அடக்கவிலையை குறிக்கின்றது. இருப்புநிலைக் குறிப்பானது உண்மையான மற்றும் நியாயமான நிதிநிலையை உணர்த்த வேண்டும். ஆகையால், நிலைச் சொத்துகள் அதன் குறைந்து செல் மதிப்பில் காண்பிக்கப்பட வேண்டும்.

**(iii) நிலைச் சொத்தினை மாற்றுவதற்காக**

இலாப நட்டக் கணக்கில் தேய்மானம் பற்று வைக்கப்படும் போது, அதற்கு சமமான தொகை வணிகத்தில் தக்க வைக்கப்படுகிறது அல்லது வணிகத்திற்கு வெளியே முதலீடு செய்யப்படுகிறது. சொத்தின் பயனுள்ள வாழ்நாள் முடிவுக்கு வரும்போது, வணிகத்தில் உள்ள வளங்களைக் கொண்டு ஒரு புதிய சொத்து வாங்க முடியும்.

**(iv) வரிச் சலுகைகளைப் பெற**

இந்திய வருமான வரிச் சட்டத்தின்படி, வணிக வருமானத்திற்கு வரி கணக்கிடும் போது தேய்மானம் வருமானத்திலிருந்து கழித்து காண்பிக்கப்பட வேண்டும். ஆகையால், வரிச் சுமையை குறைப்பதற்காக தேய்மானம் கணக்கிடப்பட்டு இலாப நட்டக் கணக்கிற்கு மாற்றப்படுகிறது.

**(v) சட்டத் தேவையைப் பூர்த்தி செய்ய**

வருமானவரிச் சட்டத்திற்கு மட்டுமல்லாமல், பிற சட்டத்தின் சரத்துகளை பூர்த்தி செய்வதற்காக, நிலைச் சொத்தின் மதிப்பிலிருந்து தேய்மானம் நீக்கப்படுகிறது.

உதாரணமாக, இந்திய நிறுமச் சட்டம் 2013, பிரிவு 123(1) –ன்படி ஒவ்வொரு நிறுமமும் தனது பங்குதாரார்களுக்கு பங்காதாயம் அறிவிக்கும் முன் நிலைச் சொத்தின் மீது தேய்மானம் நீக்குதல் அவசியம்.

## 10.4 தேய்மானத்திற்கான காரணங்கள்

நிலைச் சொத்தின் ஏட்டு மதிப்பு குறைவதற்கு பல்வேறு காரணங்கள் உள்ளன. அவை பின்வருமாறு :

**(i) தேய்வு மற்றும் உராய்வு**

சாதாரணமாக புலனாகும் நிலைச் சொத்தை பயன்படுத்தும்போது அதன் மதிப்பு குறைந்து கொண்டே செல்கிறது. அது தேய்வு மற்றும் உராய்வு என்று அழைக்கப்படுகிறது. தேய்வு ஏற்படும்போது நிலைச் சொத்தின் மதிப்பு விகிதாச்சாரப்படி குறைகிறது.

**(ii) காலப்போக்கு**



Accountancy Ch 10_TM.indd 220 25-01-2020 14:51:07

காலப்போக்கு காரணமாக ஒரு சில சொத்துகளை பயன்படுத்தினாலும் அல்லது பயன்படுத்தாவிட்டாலும், அவற்றின் பயன்பாட்டு நிலை குறையும்.

**(iii) வழக்கொழிவு**

நவீன பதிலி சொத்துகளின் வருகையால், சொத்துகளின் மதிப்பு குறைவது வழக்கொழிவு எனப்படும். புதிய கண்டுபிடிப்புகள் மற்றும் புதுமையான செயல்முறைகள் காரணமாக இது ஏற்படுகிறது. பழைய சொத்துகள் பயன்பாட்டிற்கு உகந்ததாக இருந்தாலும், பயன்பாட்டாளர்களால் இவை விரும்பப்படுவது இல்லை. எனவே, அவை மதிப்பினை இழக்கின்றன. உதாரணமாக, நவீன கால கணினிகள் பயன்பாட்டாளர்களால் விரும்பப்படுவது.

**(iv) நோக்கத்திற்கு போதுமானதாக இல்லாமல் இருப்பது**

தேவைக்கான நோக்கத்திற்கு போதுமானதாக இல்லாமல் இருக்கும்போது, அச்சொத்தின் பயன்பாடு நிறுத்தப்படுகிறது. நிறுவனத்தின் திறனை விரிவாக்கம் செய்யும்போது இச்சொத்துகளின் திறன் போதுமானதாக இல்லாமல் போகலாம்.

**(v) பராமரிப்பின்மை**

சொத்துகள் சரிவர பராமரிக்கப்படும் போது அச்சொத்தின் வாழ்நாள் அதிகரிக்கிறது. சொத்துகள் சரிவர பராமரிக்கப்படவில்லை என்றால், அதிக அளவு தேய்மானத்திற்கான வாய்ப்புகள் உண்டு.

**(vi) அசாதாரணமான காரணிகள்**

தீ விபத்து, இயற்கைச் சீற்றங்கள் போன்ற அசாதாரண காரணிகளால் ஏற்படக்கூடிய பாதிப்புகளில், நிலைச் சொத்தின் பயன்பாடு குறையலாம். இது சொத்துகள் நீக்கப்படும் நிலைக்கும் கொண்டு செல்லலாம்.

## 10.5 தேய்மானத்தின் இயல்புகள்

தேய்மானத்தின் இயல்புகள் பின்வருமாறு:

(i) தேய்மானம் நீக்கப்பட வேண்டிய சொத்துகளின் அடக்கவிலையை வருவாய் ஈட்ட ஆகும் செலவிற்கு அல்லது இலாப நட்டக் கணக்கிற்கு, சொத்தின் வாழ்நாள் முழுவதும் ஒதுக்குகின்ற ஒரு செயல்முறை தேய்மானம் ஆகும்.

(ii) தேய்மானம் என்பது சொத்தின் அடக்க விலையை ஒதுக்கீடு செய்வது. மாறாக, சொத்தினை மதிப்பிடும் செயல்முறை அல்ல.

(iii) இது சொத்தின் ஏட்டு மதிப்பின் இறக்கம், மாறாக, சொத்தின் சந்தை மதிப்பு மீதான குறைவு அல்ல.

(iv) இது சொத்தின் வாழ்நாள் முழுவதும் அதன் ஏட்டு மதிப்பில் ஏற்படக்கூடிய படிப்படியான மற்றும் தொடர்ச்சியான மதிப்பு இறக்கம் ஆகும்.

(v) இது, தேய்மானம் ஏற்படக்கூடிய புலனாகும் நிலைச் சொத்துகளுக்கு மட்டும் கணக்கிடப்படுகிறது. புலனாகாத மற்றும் தீர்ந்து போகும் சொத்துகளுக்கு தேய்மானம் கணக்கிடப்படுவதில்லை.

**உங்களுக்குத் தெரியுமா?**

இயற்கை வளங்களான கனிமச் சுரங்கங்கள், எண்ணெய் கிணறுகள், நிலக்கரி, இவைகளைப் பெறுவதற்காக செய்யப்படும் அடக்கவிலையை ஒதுக்கீடு செய்வது வெறுமையாதல் எனப்படும். புலனாகா நிலைச் சொத்துகளாகிய நற்பெயர், காப்புரிமை, பதிப்புரிமை, வணிகக்குறி, அறிவுசார் சொத்துரிமை இவற்றை பெறுவதற்காக செய்யப்படும் அடக்கவிலையை ஒதுக்கீடு செய்வது போக்கெழுதுதல் எனப்படும்.

## 10.6 தேய்மானத் தொகையை நிர்ணயிக்கும் காரணிகள்

நிலைச் சொத்துகளின் தேய்மானத் தொகையை நிர்ணயிக்க, பல காரணிகள் உள்ளன. அவை பின்வருமாறு :

**(i) சொத்தின் ஆரம்ப அடக்கவிலை**

சொத்தின் ஆரம்ப அடக்கவிலையானது சொத்தினை வாங்குவதற்கும் அல்லது சொத்தினை உருவாக்குவதற்கும் செலவழித்த தொகை ஆகும். இது சொத்தினை வாங்குவதற்கான செலவு



Accountancy Ch 10_TM.indd 221 25-01-2020 14:51:07

அல்லது சொத்தினை நிர்மாணிப்பதற்கான செலவு அல்லது புராதன அடக்கவிலை ஆகும். இது நிலைச் சொத்தினை தற்போதைய நிலைக்கு கொண்டு வருவதற்கு அல்லது தற்போதைய இடத்திற்கு கொண்டு வருவதற்கு மேற்கொள்ளப்பட்ட எல்லா இடைநிகழ் செலவுகளையும் உள்ளடக்கியது. அதாவது, சொத்தினைப் பயன்பாட்டிற்கு கொண்டுவருவதற்குரிய அனைத்து செலவுகளை குறிக்கிறது. சொத்து வாங்கிய விலை, வண்டிக் கட்டணம், ஏற்று கட்டணம், இறக்கு கட்டணம், நிறுவுகைச் செலவு, பொருத்துகைச் செலவு, சோதனை ஓட்டத்திற்குரிய செலவுகள் ஆகியவை சொத்தின் அடக்கவிலையில் உள்ளடங்கும். சொத்து பழைய சொத்தாக இருக்கும் நிலையில். அச்சொத்தினைப் பயன்பாட்டிற்கு கொண்டுவருவதற்காக, ஆரம்ப நிலையில் மேற்கொள்ளப்படும் பழுது பார்ப்புச் செலவுகளும் சொத்தின் ஆரம்ப அடக்கவிலையில் சேரும்.

### (ii) சொத்தின் எதிர்நோக்கும் பயனளிப்பு காலம்

நிறுவனத்தில், சொத்துகள் எவ்வளவு காலத்திற்கு பயன்படுத்த முடியுமோ, அக்காலம் சொத்தின் எதிர்நோக்கும் பயனளிப்புக் காலம் எனப்படுகிறது. நிறுவனத்தில் எவ்வளவு காலம் சொத்துகள் பயன்படுத்த முடியும் அல்லது எவ்வளவு பொருட்கள் உற்பத்தி செய்ய முடியும் என்பதை அடிப்படையாக கொண்டு கணக்கிடப்படுகிறது. அறிவுசார் சொத்துகளாகிய காப்புரிமை, பதிப்புரிமை போன்றவற்றின் சட்டப்படி செல்லும் வாழ்நாள் பயனளிப்பு காலமாக எடுத்துக்கொள்ளப்படுகிறது. இந்திய நிறுமச் சட்டம், 2013, தேய்மானத்தை கணக்கிடுவதற்காக நிலைச் சொத்துகளின் பயனளிப்பு காலத்தை பரிந்துரை செய்துள்ளது. உதாரணமாக பொறிவகை இயந்திரம் மற்றும் அறைகலன் பொருத்துகளுக்கு பயனளிப்புக் காலம் முறையே 15 ஆண்டுகள் மற்றும் 10 ஆண்டுகள் என பகுதி C, பிரிவு 123ல் கொடுக்கப்பட்டுள்ளது.

### (iii) சொத்தின் இறுதி மதிப்பு

சொத்தின் எதிர்நோக்கும் பயனளிப்பு காலம் முடிந்த பிறகு அச் சொத்தினை விற்பதால் கிடைக்கும் தொகையை இது குறிக்கிறது. இது இறுதி மதிப்பு எனவும் எஞ்சிய மதிப்பு எனவும், அழைக்கப்படுகிறது. சொத்தின் இறுதி மதிப்பினை தீர்மானம் செய்வதற்கு சொத்து விற்பனையின் போது எதிர்நோக்கும் மொத்தத் தொகையிலிருந்து, சொத்தினை விற்பதற்கான செலவுகளைக் கழிக்க வேண்டும்.

### (iv) பிற காரணிகள்

மேற்கூறிய காரணிகள் மட்டுமல்லாமல் சட்டரீதியான வழிமுறைகள், தொழில்நுட்ப காரணிகள் போன்றவை தேய்மானத் தொகையை நிர்ணயிக்கின்றன.

## 10.7 தேய்மானம் கணக்கிடும் முறைகள்

நிலைச் சொத்துகளின் மீது தேய்மானம் கணக்கிட பல முறைகள் பயன்படுத்தப்படுகின்றன. நிறுவனத்தில் நிலவும் சூழ்நிலை, சொத்தின் பயன்பாடு, சொத்தின் தன்மை போன்ற காரணிகளை அடிப்படையாகக் கொண்டு நிறுவனத்தின் நிர்வாகம் தகுந்த முறையினை தேர்ந்தெடுப்பது அவசியம். கீழ்கண்டவைகள் தேய்மானம் கணக்கிடுவதற்கான பல்வேறு முறைகள்:

(i) நேர்க்கோட்டு முறை அல்லது நிலைத்தவணை முறை அல்லது ஆரம்ப அடக்கவிலை முறை
(ii) குறைந்து செல் மதிப்பு முறை அல்லது குறைந்து செல் இருப்பு முறை
(iii) ஆண்டுகளின் இலக்கங்களின் கூட்டுத்தொகை முறை
(iv) இயந்திர மணி நேர வீத முறை
(v) வெறுமையாதல் முறை
(vi) ஆண்டுத் தொகை முறை
(vii) மறுமதிப்பீட்டு முறை
(viii) ஈடு நிதி முறை
(ix) காப்பீட்டு முனைம முறை

### 10.7.1 நேர்க்கோட்டு முறை / நிலைத் தவணை முறை / ஆரம்ப அடக்கவிலை முறை

இம்முறையில் தேய்மானமாக, குறிப்பிட்ட விழுக்காடு ஒவ்வொரு ஆண்டிற்கும் சொத்தின் அடக்கவிலையிலிருந்து நீக்கப்படுகிறது. எனவே, இது ஆரம்ப அடக்கவிலை முறை என்றழைக்கப்படுகிறது. சொத்தின் வாழ்நாள் முழுவதும் தேய்மானத் தொகை ஒரே அளவாக,



Accountancy Ch 10_TM.indd 222 25-01-2020 14:51:07

சமமாக இருப்பதால் இம்முறை நிலைத் தவணை முறை எனவும் அழைக்கப்படுகிறது. தேய்மானத் தொகையையும், சொத்தின் பயனளிப்புக் கால அளவையும் வரைபடத்தில் புள்ளிகளாக்கி, கிடைக்கப்பெறும் கோடு, கிடை நேர்க்கோடாக இருப்பதால் இது நேர்க்கோட்டு முறை எனவும் அழைக்கப்படுகிறது. எந்த சொத்துகளின், பயனளிப்புக் காலம் மிக துல்லியமாக மதிப்பிடமுடியுமோ மற்றும் அதிகமான பழுது பார்ப்பு மற்றும் புதுப்பித்தல் செலவுகள் தேவைப்படாதோ அச்சொத்துக்களுக்கு இம்முறை பொருந்தும்.

இம்முறையில், தேய்மானத் தொகை மற்றும் தேய்மான விகிதம் கணக்கிட கீழ்கண்ட சூத்திரங்கள் முறையே பயன்படுத்தப்படுகின்றன.

$$\text{ஆண்டுத் தேய்மானத் தொகை} = \frac{\text{சொத்தின் ஆரம்ப அடக்கவிலை} - \text{எதிர்நோக்கும் இறுதிமதிப்பு}}{\text{சொத்தின் எதிர்நோக்கும் பயனளிப்புக் காலம் (ஆண்டுகளில்)}}$$

$$\text{தேய்மான விகிதம்} = \frac{\text{ஆண்டு தேய்மானத் தொகை}}{\text{ஆரம்ப அடக்கவிலை}} \times 100$$

## மாணவர் குறிப்பு

(அ) சொத்து வாங்கப்பட்ட ஆண்டில், பயன்படுத்தப்பட்ட காலம் ஒரு வருடத்திற்கு குறைவாக இருப்பின் நிறுவனத்தில் சொத்து பயன்படுத்தப்பட்ட காலத்தின் விகிதாச்சாரப்படி தேய்மானம் கணக்கிடப்படுகிறது.

(ஆ) சொத்தின் பயனளிப்பு காலத்தின் இறுதியில், சொத்தின் அடக்கத்திலிருந்து அதன் தேய்மானத் தொகையை கழித்தால் மீதம், ஏதாவது இறுதி மதிப்பு இருந்தால் இறுதி மதிப்பிற்கு சமமாகவும் அல்லது இறுதி மதிப்பு இல்லாமலிருந்தால் சொத்தின் மதிப்பு பூஜ்ஜியமாக இருக்கும்.

## உதாரணம்

1.1.2012 அன்று ஒரு நிறுவனம் ₹ 1,10,000 மதிப்புள்ள இயந்திரத்தை வாங்கியது. இறுதி மதிப்பு ₹ 10,000 மற்றும் அதன் எதிர்நோக்கும் பயனளிப்பு காலம் 10 ஆண்டுகள் ஆகும். ஒவ்வொரு ஆண்டு இறுதியில் நீக்கப்படவேண்டிய தேய்மானத் தொகை:

$$\text{ஆண்டுத் தேய்மானத் தொகை} = \frac{\text{சொத்தின் ஆரம்ப அடக்கவிலை} - \text{எதிர்நோக்கும் இறுதிமதிப்பு}}{\text{சொத்தின் எதிர்நோக்கும் பயனளிப்புக் காலம் (ஆண்டுகளில்)}}$$

$$= \frac{1,10,000 - 10,000}{10} = \frac{1,00,000}{10} = ₹\ 10,000$$

தேய்மானத் தொகை வரைபடத் தாளில் 5 ஆண்டுகளுக்கு குறிக்கப்படும் போது, பின்வருமாறு தோன்றும்.




## நன்மைகள்

நேர்க்கோட்டு தேய்மான முறையின் நன்மைகள் பின்வருமாறு:

### (அ) புரிந்து கொள்வதற்கு எளிது மற்றும் சுலபம்

இம்முறையில் தேய்மானக் கணக்கீடு புரிந்துக் கொள்வதற்கு எளிமையாகவும், சுலபமாகவும் உள்ளது.



Accountancy Ch 10_TM.indd 223 25-01-2020 14:51:07

### (ஆ) சமமான தேய்மான தாக்கம்

இம்முறையில் ஆண்டுதோறும் சமமான தேய்மானத் தொகை இலாப நட்டக் கணக்கிற்கு மாற்றப்படுகிறது. ஆகையால், இலாபத்தின் மீதான தேய்மான தாக்கம் ஒவ்வொரு ஆண்டும் சமமாக உள்ளது.

### (இ) சொத்தின் மதிப்பு முழுவதும் நீக்கப்படுகிறது

இம்முறையில், இறுதி மதிப்பு இல்லா நிலையில் சொத்தின் ஏட்டு மதிப்பானது பூஜ்ஜியத்திற்கும் அல்லது சொத்தின் பயனளிப்பு காலம் முடிவில் இறுதி மதிப்பளவிற்கும் குறைக்கப்படுகிறது. இவ்வாறு, சொத்து கணக்கு முழுமையாக பதிவு செய்யப்பட்டு, சொத்தின் முழுத்தொகையும் நீக்கப்படுகிறது.

### (ஈ) நிலையான உழைப்பு காலத்தைப் பெற்றுள்ள சொத்துகளுக்கு பொருத்தமானது

நிலையான உழைப்பு காலத்தைப் பெற்றுள்ள சொத்துகளுக்கு இம்முறையானது பொருத்தமானது ஆகும். அச்சூழலில், சொத்தின் பயனளிப்பு காலத்தை கணக்கிடுவது சுலபம். ஆதலால், தேய்மான விகிதத்தை எளிமையாக கணக்கிட உதவுகிறது.

## குறைபாடுகள்

நேர்க்கோட்டு முறையின் குறைபாடுகள் பின்வருமாறு :

### (அ) சொத்தின் உண்மை பயன்பாட்டினை எடுத்துக்கொள்வது இல்லை

சொத்தின் ஆரம்ப அடக்கவிலை மீது ஏற்கனவே தீர்மானிக்கப்பட்ட தேய்மான விகிதம் அடிப்படையில் ஒரு குறிப்பிட்ட தேய்மானத் தொகை ஒதுக்கப்படுகிறது. ஆகையால், தேய்மானம் கணக்கிடப்படும்போது சொத்தின் உண்மையான பயன்பாடு எடுத்துக்கொள்ளப்படுவது இல்லை.

### (ஆ) வட்டி காரணியை எடுத்துக்கொள்வது இல்லை

சொத்திற்காக முதலீடு செய்வதால் ஏற்படும் வட்டி இழப்பை இம்முறை கணக்கில் எடுத்துக் கொள்வது இல்லை. அதாவது, இந்தத் தொகை வணிக நிறுவனத்திற்கு வெளியே முதலீடு செய்திருந்தால் வட்டி ஈட்டப்பட்டிருக்கும் என்பதைக் கருத்தில் கொள்வது இல்லை.

### (இ) சொத்தின் காலம் அதிகரிக்கும் போது சொத்து மீதான தேய்மானம் அதிகமாக உள்ளது

சொத்து மீதான பராமரிப்பு செலவு, காலம் செல்ல செல்ல அதிகரித்துக் கொண்டே இருக்கும். ஆகையால் தேய்மானத் தொகை மற்றும் பராமரிப்புச் செலவுகளின் கூடுதல் ஆரம்ப காலத்தில் குறைவாகவும் மற்றும் ஆண்டுகள் செல்லச் செல்ல அதிகமாகவும் இருக்கும். ஆனால், இம்முறை இக்கருத்தினை எடுத்துக் கொள்வது இல்லை.

### (ஈ) இறுதி மதிப்பினைத் தீர்மானிப்பது கடினம்

சொத்தினை நிறுவும் பொழுதே, நீண்ட ஆண்டுகளுக்கு பின்னர், சொத்தின் நிகர இறுதி மதிப்பினை தீர்மானிப்பது மிகவும் கடினம்.

## பொருத்தம்

எந்த சொத்தின் பயனளிப்புக் காலம் முழுவதும் பராமரிப்பு மற்றும் பழுதுபார்ப்புச் செலவு ஒரே மாதிரியாக இருக்குமோ மற்றும் எந்த சொத்தின் பயனளிப்புக் காலத்தை தீர்மானிக்க முடியுமோ அம்மாதிரியான சொத்துக்கு நேர்க்கோட்டு முறையிலான தேய்மான முறை பொருந்தும்.

## எடுத்துக்காட்டு 1

ஒரு நிறுவனம், 1.1.2017 அன்று ₹ 1,00,000 மதிப்புள்ள இயந்திரம் ஒன்றை வாங்கியது. இயந்திரத்தின் எதிர்நோக்கும் பயனளிப்புக் காலம் 10 ஆண்டுகள், மற்றும் அதன் இறுதி மதிப்பு ₹ 10,000. ஒவ்வொரு ஆண்டு இறுதியிலும் அதன் தேய்மானத் தொகையை நேர்க்கோட்டு முறையில் கணக்கிடவும்.

### தீர்வு

$$\text{ஆண்டுத் தேய்மானத் தொகை} = \frac{\text{சொத்தின் ஆரம்ப அடக்கவிலை} - \text{எதிர்நோக்கும் இறுதிமதிப்பு}}{\text{சொத்தின் எதிர்நோக்கும் பயனளிப்புக் காலம் (ஆண்டுகளில்)}}$$

$$= \frac{1,00,000 - 10,000}{10} = \frac{90,000}{10} = ₹\ 9,000$$



Accountancy Ch 10_TM.indd 224 25-01-2020 14:51:07

### எடுத்துக்காட்டு 2

கீழ்கண்ட தகவல்களைக் கொண்டு, நேர்க்கோட்டு முறையில் தேய்மானத் தொகை மற்றும் தேய்மான விகிதம் காண்க.

| | |
|---|---|
| இயந்திரம் வாங்கிய விலை | ₹ 80,000 |
| நிறுவுகைச் செலவுகள் | ₹ 20,000 |
| எதிர்நோக்கும் இறுதி மதிப்பு | ₹ 35,000 |
| எதிர்நோக்கும் பயனளிப்பு காலம் | 5 வருடங்கள் |

**தீர்வு**

$$\text{ஆண்டுத் தேய்மானத் தொகை} = \frac{\text{சொத்தின் ஆரம்ப அடக்கவிலை} - \text{எதிர்நோக்கும் இறுதிமதிப்பு}}{\text{சொத்தின் எதிர்நோக்கும் பயனளிப்புக் காலம் (ஆண்டுகளில்)}}$$

$$= \frac{1,00,000 - 35,000}{5} = \frac{65,000}{5} = ₹\ 13,000$$

$$\text{தேய்மான விகிதம்} = \frac{\text{ஆண்டுத் தேய்மானத் தொகை}}{\text{ஆரம்ப அடக்கவிலை}} \times 100$$

$$= \frac{13,000}{1,00,000} \times 100 = 13\%$$

**குறிப்பு:**

சொத்தின் ஆரம்ப அடக்கவிலை = வாங்கிய விலை + நிறுவுகைச் செலவுகள்

$$= 80,000 + 20,000 = ₹\ 1,00,000$$

### எடுத்துக்காட்டு 3

கீழ்கண்ட விவரங்களிலிருந்து நேர்க்கோட்டு முறையில் தேய்மான விகிதம் கணக்கிடுக

| | |
|---|---|
| சொத்தின் அடக்கவிலை | ₹ 10,000 |
| எதிர்நோக்கும் பயனளிப்புக் காலம் | 10 வருடங்கள் |
| எதிர்நோக்கும் இறுதி மதிப்பு | ₹ 2,000 |

**தீர்வு**

$$\text{ஆண்டுத் தேய்மானத் தொகை} = \frac{\text{சொத்தின் ஆரம்ப அடக்கவிலை} - \text{எதிர்நோக்கும் இறுதிமதிப்பு}}{\text{சொத்தின் எதிர்நோக்கும் பயனளிப்புக் காலம் (ஆண்டுகளில்)}}$$

$$= \frac{10,000 - 2,000}{10} = \frac{8,000}{10} = ₹\ 800$$

$$\text{தேய்மான விகிதம்} = \frac{\text{ஆண்டுத் தேய்மானத் தொகை}}{\text{ஆரம்ப அடக்க விலை}} \times 100$$

$$= \frac{800}{10,000} \times 100 = 8\%$$

### 10.7.2 குறைந்து செல் மதிப்பு / குறைந்து செல் இருப்பு முறை

இம்முறையில் தேய்மானம் ஆண்டுதோறும் சொத்தின் குறைந்து செல் மதிப்பின் மீது ஒரு குறிப்பிட்ட நிலையான விழுக்காடாக கணக்கிடப்படுகிறது. எனவே, இம்முறை குறைந்து செல் மதிப்பு முறை என அழைக்கப்படுகிறது. குறைந்து செல் மதிப்பு என்பது சொத்தின் ஏட்டு மதிப்பு ஆகும். அதாவது (சொத்தின் அடக்க விலையிலிருந்து கடந்த கணக்காண்டு வரை உள்ள தேய்மானத் தொகை கழிக்கப்பட்டது) ஆண்டுதோறும் தேய்மானத் தொகை குறைந்து கொண்டே செல்வதால் இம்முறையானது குறைந்து செல் இருப்பு முறை அல்லது குறைந்து செல் மதிப்பு முறை எனவும் அழைக்கப்படுகிறது.



Accountancy Ch 10_TM.indd 225 25-01-2020 14:51:07

**உங்களுக்குத் தெரியுமா?**

குறைந்து செல் மதிப்பு முறையில் கீழ்க்கண்ட சூத்திரம் தேய்மான விகிதம் கணக்கிட பயன்படுத்தப்படுகிறது.

$$\left[1-\sqrt[n]{\frac{\text{இறுதி மதிப்பு}}{\text{ஆரம்ப அடக்கவிலை}}}\right]\times 100$$

உதாரணம்: சொத்தின் அடக்கவிலை ₹ 1,00,000; இறுதி மதிப்பு ₹ 1,000; n = பயனளிப்பு காலம் = 5 ஆண்டுகள்

$$\left[1-\sqrt[5]{\frac{1,000}{1,00,000}}\right]\times 100 = [1-(0.01)^{1/5}]\times 100$$
$$= (1-0.3981)\times 100$$
$$= 0.6019\times 100 = 60.19\%$$

தேய்மான விகிதம் = 60.19%

இறுதி மதிப்பு ₹ 10,000; ஆக இருக்கும்போது, தேய்மான விகிதம் 36.90%

இறுதி மதிப்பு இல்லாமல் இருக்கும்போது தேய்மான விகிதம் 100% ஆக இருக்கும். ஆகையால் தேய்மானம் கணக்கிடுவதற்கு இறுதி மதிப்பு ₹ 1 என கருதவேண்டும்.

இறுதி மதிப்பு குறைவாக இருக்கும்போது, தேய்மான விகிதம் அதிகமாக இருக்கும்.

### உதாரணம்

1.1.2012 அன்று ஒரு நிறுவனம் ₹ 1,00,000 மதிப்புள்ள இயந்திரம் ஒன்றை வாங்கியது. குறைந்து செல் மதிப்பு முறையில் ஆண்டுக்கு 10% தேய்மானம் 5 ஆண்டுகளுக்கு கணக்கிடப்பட்டால் அதன் விவரம் பின்வருமாறு :

| | |
|---|---|
| சொத்தின் அடக்கவிலை 1.1.2012<br>கழிக்க : 2012 தேய்மானம் 10% (1,00,000 × 10/100) | ₹ 1,00,000<br>₹ 10,000 |
| 1.1.2013 குறைந்து செல் மதிப்பு<br>கழிக்க : 2013 தேய்மானம் 10% (90,000 × 10/100) | ₹ 90,000<br>₹ 9,000 |
| 1.1.2014 குறைந்து செல் மதிப்பு<br>கழிக்க : 2014 தேய்மானம் 10% (81,000 × 10/100) | ₹ 81,000<br>₹ 8,100 |
| 1.1.2015 குறைந்து செல் மதிப்பு<br>கழிக்க : 2015 தேய்மானம் 10% (72,900 × 10/100) | ₹ 72,900<br>₹ 7,290 |
| 1.1.2016 குறைந்து செல் மதிப்பு<br>கழிக்க : 2016 தேய்மானம் 10% (65,610 × 10/100) | ₹ 65,610<br>₹ 6,561 |
| 1.1.2017 குறைந்து செல் மதிப்பு<br>கழிக்க : 2017 தேய்மானம் 10% (59,049 × 10/100) | ₹ 59,049<br>₹ 5,905 |

ஐந்தாண்டுகளுக்கான தேய்மானத் தொகை வரைபடத் தாளில் குறிக்கப்படும் போது, பின்வருமாறு தோன்றும்.






Accountancy Ch 10_TM.indd 226
25-01-2020 14:51:07

### நன்மைகள்

**குறைந்து செல் மதிப்பு முறையின் நன்மைகள் பின்வருமாறு :**

**(அ) வருமானத்தின் மீது சீரான தாக்கம்**

தொடக்க ஆண்டுகளில் தேய்மானம் அதிகமாகவும் பழுதுபார்ப்புச் செலவுகள் குறைவாகவும் இருக்கும். சொத்தின் பயனளிப்பு காலம் அதிகரித்து சொத்து பழையதாகும் போது, தேய்மானம் குறைவாகவும் பழுதுபார்ப்புச் செலவு அதிகமாகவும் இருக்கும். எனவே, ஆண்டுதோறும் ஏற்படக்கூடிய தேய்மானம் மற்றும் பழுதுபார்ப்பின் மொத்தத் தொகை, இலாபத்தில் சீரான தாக்கத்தை ஏற்படுத்தும்.

**(ஆ) செயல்காரணத் தொடர்புடைய முறை**

தொடக்க காலத்தில் சொத்தின் உற்பத்தி திறன் அதிகமாக இருக்கும் போது, அதிகமான தேய்மானம் நீக்கப்படுகிறது. பின்வரும் ஆண்டுகளில் சொத்தின் உற்பத்தி திறன் குறைவாக இருக்கும் போது குறைவான தேய்மானம் நீக்கப்படுகிறது.

### குறைபாடுகள்

குறைந்து செல் மதிப்பு முறையின் குறைபாடுகள்

**(அ) சொத்து முழுமையாகப் போக்கெழுதப்படுவதில்லை**

சொத்து வழக்கொழிவானாலும் மற்றும் பயனற்றதானாலும், இம்முறையில் அதன் மதிப்பை பூஜ்ஜியத்திற்கு கொண்டு வரமுடிவதில்லை. மேலும், சொத்து கணக்கில் ஏதேனும் ஒரு இருப்பு இருந்து கொண்டே இருக்கும்.

**(ஆ) வட்டி காரணியை எடுத்துக்கொள்வதில்லை**

சொத்தில் முதலீடு செய்வதால் ஏற்படும் வட்டி இழப்பினை இம்முறை கணக்கில் எடுத்துக் கொள்வதில்லை. அதாவது, இந்த தொகை வணிக நிறுவனத்திற்கு வெளியே முதலீடு செய்திருந்தால் வட்டி ஈட்டப்பட்டிருக்கும் என்பதைக் கருத்தில் கொள்வதில்லை.

**(இ) தேய்மான விகிதம் கணக்கிடுவதில் சிரமம்**

இம்முறையில் தேய்மான விகிதம் மிக எளிதில் கணக்கிட முடிவதில்லை. பொதுவாக தேய்மான விகிதம் அதிகமாக வைக்கப்படுகிறது. ஏனெனில், சொத்தினை முழுமையாக இறுதி மதிப்பு வரை கொண்டு வருவதற்கு மிக நீண்ட காலம் எடுத்துக் கொள்ளப்படுகிறது.

**(ஈ) சொத்தின் உண்மையான பயன்பாட்டினை கணக்கில் எடுத்துக்கொள்வது இல்லை**

இம்முறையில், ஏற்கெனவே தீர்மானிக்கப்பட்ட தேய்மான விகிதம் சொத்தின் குறைந்து செல் இருப்பிலிருந்து நீக்கப்படுகிறது. ஆனால், தேய்மானத்தைக் கணக்கிடும்போது சொத்தின் உண்மை பயன்பாட்டினை கருத்தில் எடுத்துக்கொள்வது இல்லை.

### பொருத்தம்

எந்தெந்த சொத்துகள் நீண்ட பயனளிப்புக் காலத்தைக் கொண்டுள்ளதோ மற்றும் எந்த சொத்துகளுக்கு எதிர்காலத்தில் கணிசமான பழுதுபார்ப்புச் செலவு தேவைப்படுகிறதோ அச்சொத்துகளுக்கு இம்முறை பொருந்தும். உதாரணம். கட்டடம், பொறிவகை மற்றும் இயந்திரம்.

### எடுத்துக்காட்டு 4

1.1.2018 அன்று ஒரு நிறுவனம் ₹ 9,000 மதிப்புள்ள இயந்திரம் ஒன்றை வாங்கியது. நிறுவுகைச் செலவாக ₹ 1,000 செலவழித்தது. குறைந்து செல் மதிப்பு முறையில் ஆண்டுக்கு தேய்மானம் 15% என்ற விகிதத்தில் 2018 ஆம் ஆண்டுக்கு தேய்மானத் தொகையை கணக்கிடவும். கணக்குகள் மார்ச் 31 ல் முடிக்கப்பெற்றன.

### தீர்வு

| | |
|---|---|
| சொத்தின் அடக்க விலை | = 9,000 + 1,000 = ₹ 10,000 |
| தேய்மான விகிதம் | = 15% |
| சொத்து வாங்கிய நாள் | = 1.1.2018 |



Accountancy Ch 10_TM.indd 227 25-01-2020 14:51:07

சொத்து பயன்படுத்திய மாதங்கள் = 1.1.2018 முதல் 31.3.2018 வரை 3 மாதங்கள்

தேய்மானத் தொகை = 10,000 மீது 15%, 3 மாதங்களுக்கு

= $10{,}000 \times 15\% \times 3/12 =$ ₹ 375

**உங்களுக்குத் தெரியுமா?**

மைக்ரோசா∴ப்ட் எக்ஸெலில், நிதியியல் செயல்கூறுகளில் (Financial functions) தேய்மானத்தை கணக்கிடும் செயல்கூறுகள் உள்ளன. உதாரணத்திற்கு SLN– நேர்க்கோட்டு முறையில் தேய்மானத்தை கண்டுபிடிக்கவும், DB-குறைந்து செல் மதிப்பு முறையிலும் தேய்மானத்தை கணக்கிட உதவுகின்றன.

### 10.7.2.1 நேர்க்கோட்டு முறைக்கும், குறைந்து செல் மதிப்பு முறைக்கும் இடையே உள்ள வேறுபாடுகள்

நேர்க்கோட்டு முறைக்கும், குறைந்து செல் மதிப்பு முறைக்கும் இடையே உள்ள வேறுபாடுகள் பின்வருமாறு:

| | வேறுபாடுகள் | நேர்க்கோட்டு முறை | குறைந்து செல் மதிப்பு முறை |
|---|---|---|---|
| 1 | கணக்கீட்டு அடிப்படை | ஆண்டுதோறும் சொத்தின் ஆரம்ப அடக்கவிலை மீது தேய்மானம் கணக்கிடப்படுகிறது. | ஒவ்வொரு ஆண்டும் சொத்தின் குறைந்து செல் மதிப்பின்மீது தேய்மானம் கணக்கிடப்படுகிறது. |
| 2 | தேய்மானத் தொகை | அனைத்து ஆண்டுகளுக்கும் தேய்மானத் தொகை சமமாக ஒரே அளவாக இருக்கும். | ஒவ்வொரு ஆண்டும் தேய்மானத்தொகை குறைந்து கொண்டே போகும். |
| 3 | பயனளிப்பு காலம் முடிவில் ஏட்டு மதிப்பு | சொத்தின் இறுதி மதிப்பு இல்லாத நிலையில் சொத்தின் ஏட்டு மதிப்பு பூஜ்ஜியமாகவும், இறுதி மதிப்பு இருந்தால் இறுதி மதிப்பிற்கு சமமாக இருக்கும். | சொத்தின் ஏட்டு மதிப்பு ஒருபோதும் பூஜ்ஜியமாக இருக்காது. |
| 4 | தேய்மான விகித கணக்கீடு | தேய்மான விகிதத்தை கணக்கிடுதல் எளிமையானது. | தேய்மான விகிதத்தை கணக்கிடுதல் மிகக் கடினம். |
| 5 | தேய்மானத் தொகை கணக்கீட்டின் படிகள் | தேய்மானத் தொகை முதலிலும், தேய்மான விகிதம் இரண்டாவதாகவும் கணக்கிடப்படுகிறது. | தேய்மான விகிதம் முதலிலும் தேய்மானத் தொகை இரண்டாவதாகவும் கணக்கிடப்படுகிறது. |
| 6 | இலாப நட்டக் கணக்கின் மீதான தாக்கம் | காலம்செல்லச்செல்ல,பழுதுபார்ப்புச் செலவுகள் அதிகரித்து கொண்டே இருப்பதால், மொத்த தாக்கம், அதாவது தேய்மானத் தொகை மற்றும் பழுதுபார்ப்புச் செலவுகளின் கூட்டுத் தொகை ஒவ்வொரு ஆண்டும் அதிகரித்துக் கொண்டே போகும். | காலம் செல்ல செல்ல, பழுதுபார்ப்பு செலவுகள் அதிகரித்தும், தேய்மானத் தொகை குறைந்தும் செல்வதால், தேய்மானம் மற்றும் பழுதுபார்ப்புச் செலவுகளின் மொத்தத் தொகை, ஆண்டுதோறும் பெரும்பாலும் சமமாக இருக்கும். |
| 7 | பொருத்தம் | பழுதுபார்ப்புச் செலவுகள் ஒரே அளவானதாகவும், வழக்கொழிவு வாய்ப்புகள் குறைவாகவும், மேலும் சொத்தின் மதிப்பு முடிவடைவது அதன் காலத்தை பொறுத்து அமைவதுமான சொத்துகளுக்கு இந்த முறை பொருத்தமானது. | தொழில் நுட்ப மாற்றத்தால் பாதிப்படைவதும், மற்றும் காலம் செல்லச் செல்ல, அதிக பழுதுபார்ப்புச் செலவு தேவைப்படும் சொத்துகளுக்கு இந்த முறை ஏற்றது. |



Accountancy Ch 10_TM.indd 228 25-01-2020 14:51:07




நேர்க்கோட்டு முறை




குறைந்து செல் மதிப்பு முறை

### 10.7.3 ஆண்டுகளின் இலக்கங்களின் கூட்டுத்தொகை முறை

இம்முறையானது குறைந்து செல் மதிப்பு முறை போன்றது. சொத்தின் காலாவதியாகாத வாழ்நாளுக்குரிய விகிதாச்சாரப்படி தேய்மானத் தொகை ஆண்டுதோறும் குறைந்துகொண்டே செல்லும். வழக்கொழிவு வாய்ப்புகள் அதிகமாகவும் மற்றும் சொத்துகள் பழையனவாகும்போது பழுதுபார்ப்பு செலவுகள் அதிகரிக்கும் சொத்துகளுக்கு இம்முறை பொருத்தமாக இருக்கும். இம்முறையில் ஆண்டுத் தேய்மானம், சொத்தின் அடக்கத்தை சொத்தின் மீதமுள்ள பயனளிப்பு கால ஆண்டுகளால் பெருக்கி, சொத்தின் மொத்த மீதமுள்ள பயனளிப்புக் கால ஆண்டுகளின் எண்ணிக்கையின் கூட்டுத் தொகையால் வகுத்து கணக்கிடப்படுகிறது. இம்முறையில், கீழ்க்கண்ட சூத்திரம், தேய்மானத் தொகை கணக்கிடப் பயன்படுத்தப்படுகிறது.

$$\text{ஆண்டுத் தேய்மானத் தொகை} = \frac{\left[\begin{array}{c}\text{சொத்தின் மீதமுள்ள பயனளிப்புக்}\\ \text{காலம் (நடப்பு ஆண்டு உட்பட)}\end{array}\right] - \left[\text{சொத்தின் அடக்க விலை} - \text{இறுதி மதிப்பு}\right]}{\text{1 முதல் சொத்தின் பயனளிப்பு காலம் வரை உள்ள ஆண்டுகளின் கூடுதல்}}$$

**மாணவர் செயல்பாடு**

***சிந்தனைக்கு:*** பல்வேறு வகையான சொத்துகளுக்கு, பல்வேறு வகையான தேய்மான கணக்கீட்டு முறைகளை நிறுவனங்கள் பயன்படுத்துவது ஏன்?

### 10.7.4 இயந்திர மணிநேர வீத முறை

இம்முறையில் தேய்மானம், ஒரு இயந்திர மணி நேர அடிப்படையில் கணக்கிடப்படுகிறது. சொத்தின் அடக்கத்திலிருந்து இறுதி மதிப்பு ஏதேனும் இருந்தால் அதை கழித்தபின் இயந்திரத்தின் எதிர்நோக்கும் மொத்த வேலையை இயந்திரமணி நேரத்தால் வகுப்பதன் மூலம் ஒரு மணி நேரத்திற்கான தேய்மானமானது கணக்கிடப்படுகிறது. கொடுக்கப்பட்ட ஆண்டின் உண்மையான தேய்மானமானது அந்த ஆண்டில் பயன்படுத்தப்பட்ட இயந்திரத்தின் வேலை நேரத்தைப் பொறுத்து அமைகிறது. இந்த முறையின் சிறப்பு அம்சம் என்னவெனில், சொத்து பயன்படுத்தப்பட்ட விகிதாச்சாரப்படி தேய்மானம் கணக்கிடப்படுகிறது. இம்முறையில் சொத்தின் வாழ்நாள் ஆண்டுகளின் அடிப்படையில் அல்லாமல் இயந்திரமணி வேலை நேரத்தின் அடிப்படையில் தீர்மானிக்கப்படுகிறது. தேய்மான விகிதமானது கீழ்க்கண்ட சூத்திரத்தைப் பயன்படுத்தி தீர்மானிக்கப்படுகிறது.

$$\text{ஒரு மணி நேரத்திற்கான தேய்மான விகிதம்} = \frac{\text{சொத்தின் அடக்க விலை} - \text{எதிர்நோக்கும் இறுதி மதிப்பு}}{\text{இயந்திரமணி நேரங்களில் சொத்தின் பயனளிப்பு காலம்}}$$

$$\text{தேய்மானத் தொகை} = \begin{array}{c}\text{பயன்படுத்தப்பட்ட இயந்திர}\\ \text{மணிநேரங்களின் எண்ணிக்கை}\end{array} \times \begin{array}{c}\text{ஒரு மணி நேரத்திற்கான}\\ \text{தேய்மான விகிதம்}\end{array}$$

### 10.7.5 வெறுமையாதல் முறை

இயற்கை வளங்கள் தீர்ந்துபோதல் வெறுமையாதல் என்று அழைக்கப்படுகிறது. அதாவது, சொத்துகளின் அளவு எண்ணிக்கையில் குறைவது வெறுமையாதல் எனப்படுகிறது. தோண்டி எடுத்தல் மூலம் தீர்ந்து போகக்கூடிய சொத்துகளுக்கு இம்முறை பொருத்தமானது ஆகும்.



Accountancy Ch 10_TM.indd 229 25-01-2020 14:51:08

உதாரணம். சுரங்கங்கள், எண்ணெய் வயல்கள், போன்றவை இம்முறையில் தேய்மான விகிதம் சொத்தின் பயனளிப்புக் காலம் முழுவதும் அது உற்பத்தி செய்யக்கூடிய சொத்தின் அலகுகளின் எண்ணிக்கை அடிப்படையில் கணக்கிடப்படுகிறது.

$$\text{ஒரு அலகிற்கான தேய்மானம்} = \frac{\text{சொத்தின் ஆரம்ப அடக்க விலை}}{\text{சொத்தின் பயனளிப்புக் கால உற்பத்தி அலகுகள்}}$$

$$\text{தேய்மானத் தொகை} = \frac{\text{அந்த ஆண்டில் உற்பத்தி}}{\text{செய்யப்பட்ட அலகுகள்}} \times \text{ஒரு அலகிற்கான தேய்மானம்}$$

**குறிப்பு :** இதில் தேய்மானம் நீக்கப்படவில்லை என்றாலும், பொருத்துகைக் கொள்கைப்படி, சொத்தின் மதிப்பிலிருந்து போக்கெழுதுவதற்காகப் பயன்படுகிறது.

### 10.7.6 ஆண்டுத் தொகை முறை

இம்முறையில், தேய்மானம் கணக்கிடும்போது சொத்தின் ஆரம்ப அடக்கவிலை மட்டுமல்லாமல் முதலீடுகளிலிருந்து பெறப்படும் வட்டியும் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படுகிறது. தொடர்புடைய நிலைச் சொத்தில் முதலீடு செய்யாமல், வேறு ஏதாவது சொத்தில் முதலீடு செய்திருந்தால் குறிப்பிட்ட வட்டி பெறப்பட்டிருக்கும் என்ற கருத்தின் அடிப்படையில் வட்டியானது கருத்தில் எடுத்துக்கொள்ளப்படுகிறது. தேய்மானத் தொகையை கணக்கிட ஆண்டுத்தொகை காரணி பயன்படுத்தப்படுகிறது. ஆண்டுத் தொகை காரணியை, ஆண்டுத் தொகை அட்டவணை அல்லது சூத்திரத்தை பயன்படுத்தி கணக்கிடலாம்.

தேய்மானத் தொகை பின்வருமாறு கணக்கிடப்படுகிறது.

தேய்மானத் தொகை = ஆண்டுத் தொகை காரணி × சொத்தின் ஆரம்ப அடக்க விலை

**உங்களுக்குத் தெரியுமா?**

ஆண்டுத் தொகை காரணியை கணக்கிட கீழ்கண்ட சூத்திரம் பயன்படுகிறது.

$$\text{ஆண்டுத் தொகை காரணி} = \frac{i(1+i)^n}{(1+i)^n - 1}$$

இங்கு, $i$ = வட்டி விகிதம்;

$n$ = சொத்தின் எதிர்பார்க்கப்படும் பயனளிக்கும் ஆண்டுகளின் எண்ணிக்கை

### 10.7.7 மறுமதிப்பீட்டு முறை

இம்முறையில், ஆண்டுத் தேய்மானமானது சொத்தின் ஆண்டு இறுதி மதிப்பினை அச்சொத்தின் ஆண்டு தொடக்க மதிப்போடு ஒப்பிட்டு கணக்கிடப்படுகிறது. சொத்தின் ஆண்டு இறுதி மதிப்பானது அத்துறையில் சிறந்து விளங்கும் நபரின் உதவியோடு தீர்மானிக்கப்படுகிறது. ஆண்டு இறுதி மதிப்பிற்கும் ஆண்டு தொடக்க மதிப்பிற்கும், உள்ள வேறுபாடு அந்த ஆண்டுக்குரிய தேய்மானமாகக் கருதப்படுகிறது. இம்முறையானது கால்நடைகள், விடுகருவிகள் போன்றவைகளுக்கு பயன்படுத்தப்படுகிறது.

### 10.7.8 ஈடு நிதி முறை

சொத்தின் பயனுள்ள வாழ்நாள் முடியும் வரை தேய்மானம் மட்டும் நீக்கப்படாமல் அச்சொத்தினை மாற்றம் செய்வதற்காக போதிய நிதியை ஏற்படுத்த வேண்டும் என்று விரும்பும் போது இம்முறை பயன்படுத்தப்படுகிறது. இம்முறையில், தேய்மானத் தொகையானது, தேய்மான நிதி கணக்கிற்கு மாற்றப்பட்டு, நிறுவனத்திற்கு வெளியே முதலீடு செய்யப்படுகிறது. ஒரு குறிப்பிட்ட வட்டியை ஈட்டிதரும் பாதுகாப்பான முதலீடுகளில் முதலீடு செய்யப்படுகிறது. தேய்மானத் தொகையோடு ஆண்டுதோறும் பெறப்பட்ட வட்டி, ஆண்டுதோறும் திரும்ப முதலீடு செய்யப்படுகிறது. சொத்தின் வாழ்நாள் முடியும்போது முதலீடுகள் விற்கப்பட்டு புதிய சொத்தினை பெறுவதற்காக விற்பனை தொகையானது பயன்படுத்தப்படுகிறது. உயர்ந்த மதிப்புள்ள சொத்துகளுக்கு இம்முறை பொருத்தமாக உள்ளது. இம்முறை தேய்மான நிதிமுறை எனவும் அழைக்கப்படுகிறது. இம்முறையானது தேய்மானத்தை கணக்கில் எடுத்துக்கொள்வதோடு மட்டுமல்லாமல் சொத்தினை மாற்றி அமைப்பதற்குத் தேவையான நிதியையும் ஒதுக்கீடு செய்கிறது.

### 10.7.9 காப்பீட்டு முனைம முறை

இம்முறையில், சொத்தினை மாற்றுவதற்காக தேவைப்படும் தொகை அளவிற்கு, காப்பீட்டு முனைமம் எடுக்கப்படுகிறது. தேய்மானத் தொகையானது ஆண்டுதோறும் முனைமமாக காப்பீட்டு நிறுவனத்திற்கு



Accountancy Ch 10_TM.indd 230 25-01-2020 14:51:08

செலுத்தப்படுகிறது. காப்பீட்டு ஆவணம் முதிர்வடையும் போது ஆவணத் தொகையானது காப்பீட்டு நிறுவனத்திடமிருந்து பெறப்பட்டு புதிய சொத்து ஒன்றினை வாங்குவதற்கு பயன்படுத்தப்படுகிறது.

ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு, புலனாகாத சொத்துக்களின் அடக்க விலையை ஒதுக்கீடு செய்வது போக்கெழுதுதல் என்று அழைக்கப்படுகிறது.

## 10.8 தேய்மானம் பதிவு செய்யப்படும் முறைகள்

தேய்மானத்தை பதிவு செய்வதற்கு இரண்டு முறைகள் பின்பற்றப்படுகின்றன.

(i) தேய்மானத்தை சொத்து கணக்கிற்கு மாற்றுதல்

(ii) தேய்மானத்தை தேய்மான ஒதுக்கீடு கணக்கிற்கு மாற்றுதல்

### 10.8.1 தேய்மானத்தை சொத்து கணக்கிற்கு மாற்றுதல்

இம்முறையில் ஒவ்வொரு கணக்காண்டு முடிவிலும் தேய்மானத் தொகை, தேய்மானக் கணக்கில் பற்று வைக்கப்படுகிறது. மேலும், அதே தொகை, சொத்து கணக்கில் வரவு வைக்கப்படுகிறது. ஆகையால், இருப்பு நிலைக் குறிப்பில் சொத்தின் மதிப்பிலிருந்து தேய்மானம் நீக்கிய பிறகு காண்பிக்கப்படுகிறது. தேய்மானம் என்பது ஒரு வருவாய் செலவினமாகக் கருதப்பட்டு இலாபநட்ட கணக்கிற்கு மாற்றப்படுகிறது.

தேய்மானம் மற்றும் அதன் தொடர்பான நடவடிக்கைகளுக்கு, கீழ்க்கண்ட குறிப்பேட்டுப் பதிவுகள் செய்யப்படவேண்டும்.

(அ) சொத்து வாங்கும் போது

| | | | |
|---|---|---|---|
| சொத்து க/கு | ப | XXX | |
| வங்கி க/கு | | | XXX |

(ஆ) ஆண்டு இறுதியில் தேய்மானத்திற்கான பதிவு செய்யும் போது

| | | | |
|---|---|---|---|
| தேய்மானக் க/கு | ப | XXX | |
| சொத்து க/கு | | | XXX |

(இ) தேய்மானக் கணக்கினை முடிவுக்கு கொண்டு வர

| | | | |
|---|---|---|---|
| இலாப நட்டக் க/கு | ப | XXX | |
| தேய்மானக் க/கு | | | XXX |

(ஈ) சொத்தை விற்பனை செய்யும் போது

| | | | |
|---|---|---|---|
| வங்கி க/கு | ப | XXX | |
| இலாப நட்டக் க/கு | ப | XXX | |
| சொத்து க/கு | | | XXX |

**குறிப்பு :** சொத்து விற்பனையின் போது இலாபம் கிடைக்கப்பெற்றால், இலாப நட்டக் கணக்கு வரவு வைக்கப்படவேண்டும்.

தேய்மான ஒதுக்கு கணக்கு ஏற்படுத்தும் போது

இம்முறையில், தேய்மான ஒதுக்கு கணக்கு ஏற்படுத்தப்படுகிறது. ஆண்டுதோறும், நீக்கப்படும் தேய்மானத் தொகை சொத்து கணக்கிற்கு மாற்றாமல், தேய்மான ஒதுக்கு கணக்கிற்கு மாற்றப்படுகிறது. எனவே, இருப்பு நிலைக் குறிப்பில் சொத்து கணக்கு உண்மையான அடக்க விலையில் காண்பிக்கப்படுகிறது. இருப்பு நிலைக் குறிப்பில் நடப்புப் பொறுப்புகள் மற்றும் ஒதுக்குகள் என்ற தலைப்பின் கீழ் தேய்மான ஒதுக்கு தொகை காண்பிக்கப்படுகிறது. தேய்மானம் பெயரளவு கணக்கு என்பதால், ஒவ்வொரு ஆண்டும் அந்த ஆண்டின் இலாப நட்டக் கணக்கில் பற்று செய்து முடிக்கப் பெறுகின்றது.

**உதாரணம்:**

பொறிவகை மற்றும் இயந்திரத்தின் அடக்கவிலை ₹ 10,000; தேய்மானம் ₹ 1,000

**முறை 1 :** தேய்மான ஒதுக்கு கணக்கு உருவாக்காத போது

**இருப்பு நிலைக் குறிப்பு (பகுதி)**

| பொறுப்புகள் | ₹ | சொத்துகள் | | ₹ |
|---|---|---|---|---|
| | | பொறிவகை இயந்திரம் | 10,000 | |
| | | கழிக்க: தேய்மானம் | 1,000 | 9,000 |

**முறை 2 :** தேய்மான ஒதுக்கு கணக்கு பராமரிக்கப்படும் போது

**இருப்பு நிலைக் குறிப்பு (பகுதி)**

| பொறுப்புகள் | ₹ | சொத்துகள் | ₹ |
|---|---|---|---|
| தேய்மான ஒதுக்கு | 1,000 | பொறிவகை இயந்திரம் | 10,000 |

உங்களுக்குத் தெரியுமா? தேய்மான ஒதுக்கு முறையில், குறிப்பேட்டில் கீழ்க்கண்ட பதிவுகள் செய்யப்படுகின்றன.

(அ) சொத்து வாங்கும்போது

| | | | |
|---|---|---|---|
| சொத்து க/கு | ப | xxx | |
| வங்கி க/கு | | | xxx |

(ஆ) ஆண்டின் இறுதியில் தேய்மானம் ஒதுக்கப்படும்போது

| | | | |
|---|---|---|---|
| தேய்மானக் க/கு | ப | xxx | |
| தேய்மான ஒதுக்கு க/கு | | | xxx |

(இ) தேய்மானக் கணக்கு முடிக்கப் பெறும்போது

| | | | |
|---|---|---|---|
| இலாப நட்டக் க/கு | ப | xxx | |
| தேய்மானக் க/கு | | | xxx |

**சொத்து விற்கப்படும் போது**

(ஈ) சொத்து விற்பனை செய்யும் போது கூடியுள்ள தேய்மானத்தை சொத்து கணக்கிற்கு மாற்ற

| | | | |
|---|---|---|---|
| தேய்மான ஒதுக்கு க/கு | ப | xxx | |
| சொத்து க/கு | | | xxx |

**குறிப்பு:** இந்த குறிப்பேட்டுப் பதிவிற்கு பிறகு, சொத்தானது, விற்பனை நாள் வரை கூடியுள்ள தேய்மானத் தொகை குறிப்பிட்ட சொத்திலிருந்து குறைத்துக் காட்டப்படுகிறது. அதாவது, சொத்து கணக்கு ஏட்டு மதிப்பில் காண்பிக்கப்படுகிறது.

(உ) சொத்து விற்கப்படும் போது

| | | | |
|---|---|---|---|
| வங்கி க/கு | ப | xxx | |
| இலாப நட்டக் க/கு | ப | xxx | |
| சொத்து க/கு | | | xxx |

குறிப்பு: விற்பனை இலாபத்தில் செய்யப்பட்டால், இலாப நட்டக் கணக்கு வரவு வைக்கப்படும்.



Accountancy Ch 10_TM.indd 232 25-01-2020 14:51:08

### மாணவர் குறிப்பு

சொத்து விற்பனைத் தொடர்பான நடவடிக்கைகள் சொத்து முடிப்பு கணக்கு என்ற தற்காலிக கணக்கிற்கு மாற்றம் செய்து முடிக்கப்படலாம். ஒவ்வொரு முறை சொத்து விற்கப்படும் போதும், ஒரு தனிபட்ட சொத்து முடிப்பு கணக்கு துவக்கப்பட்டு, சொத்தின் மீது இருப்புத் தொகை, சொத்து முடிப்பு கணக்கிற்கு மாற்றப்படுகிறது. சொத்து விற்பனைத் தொடர்பான அனைத்து நடவடிக்கைகளும், சொத்து முடிப்பு கணக்கில் பதியப்படுகின்றன. சொத்து விற்பனை செய்தவுடன், சொத்து முடிப்பு கணக்கு முடிக்கப்படுகிறது.

### எடுத்துக்காட்டு 5

நேர்க்கோட்டு முறையில் தேய்மானத் தொகை மற்றும் தேய்மான விகிதம் காண்க. மேலும் முதல் இரண்டு ஆண்டுகளுக்கு குறிப்பேட்டுப் பதிவுகள் தருக. ஒவ்வொரு ஆண்டும் கணக்குகள் டிசம்பர் 31 ல் முடிக்கப்படுகின்றன.

| | |
|---|---|
| ஜனவரி 1, 2016 இயந்திரம் வாங்கியதற்காக செலுத்தியது | ₹ 1,40,000 |
| ஜனவரி 1, 2016 இயந்திரம் கொண்டு வருவதற்கு போக்குவரத்துச் செலவு | ₹ 1,000 |
| ஜனவரி 1, 2016 நிறுவுகைச் செலவுகள் | ₹ 9,000 |
| இறுதி மதிப்பு | ₹ 45,000 |
| எதிர்நோக்கும் பயனளிப்பு காலம் | 7 ஆண்டுகள் |

### தீர்வு

$$\text{ஆண்டுத் தேய்மானத் தொகை} = \frac{\text{இயந்திரத்தின் ஆரம்ப அடக்கவிலை – எதிர்நோக்கும் இறுதி மதிப்பு}}{\text{எதிர்நோக்கும் பயனளிப்பு காலம் ஆண்டுகளில்}}$$

$$= \frac{1{,}50{,}000 - 45{,}000}{7} = \frac{1{,}05{,}000}{7} = ₹\ 15{,}000$$

$$= \frac{15{,}000}{1{,}50{,}000} \times 100 = 10\%$$

**குறிப்பு:**

சொத்தின் அடக்க விலை = வாங்கிய விலை + போக்குவரத்துச் செலவு + நிறுவுகைச் செலவு

= 1,40,000 + 1,000 + 9,000 = ₹ 1,50,000

### குறிப்பேட்டுப் பதிவுகள்

| தேதி | விவரம் | | பற்று ₹ | வரவு ₹ |
|---|---|---|---|---|
| 2016 ஜனவரி 1 | இயந்திரக் க/கு<br>வங்கி க/கு<br>(இயந்திரம் வாங்கியது) | ப | 1,40,000 | 1,40,000 |
| ஜனவரி 1 | இயந்திரக் க/கு<br>வங்கி க/கு<br>(இயந்திரம் வாங்கியதில் போக்குவரத்து மற்றும் நிறுவுகைச் செலவுகள் செய்தது) | ப | 10,000 | 10,000 |
| டிசம்பர் 31 | தேய்மானக் க/கு<br>இயந்திரக் க/கு<br>(தேய்மானம் நீக்கியது) | ப | 15,000 | 15,000 |
| டிசம்பர் 31 | இலாப நட்டக் க/கு<br>தேய்மானக் க/கு<br>(தேய்மானத் தொகை இலாப நட்டக் கணக்கிற்கு மாற்றியது) | ப | 15,000 | 15,000 |



Accountancy Ch 10_TM.indd 233 25-01-2020 14:51:09

| | | | |
|---|---|---|---|
| 2017<br>டிசம்பர் 31 | தேய்மானக் க/கு ப<br>இயந்திரக் க/கு<br>(தேய்மானம் நீக்கியது) | 15,000 | 15,000 |
| டிசம்பர் 31 | இலாப நட்டக் க/கு ப<br>தேய்மானக் க/கு<br>(தேய்மானத் தொகை இலாப நட்டக் கணக்கிற்கு மாற்றியது) | 15,000 | 15,000 |

## எடுத்துக்காட்டு 6

இராமு நிறுவனம் ஜூலை 1, 2016–ல் இயந்திரம் ஒன்றை ₹ 14,000 க்கு வாங்கியது. அதை நிறுவுவதற்கு ₹ 1,000 செலவழித்தது. நிறுவனம் நிலைத் தவணை முறையில் 10% ஆண்டுதோறும் தேய்மானமாக நீக்கியது. ஒவ்வொரு ஆண்டும் கணக்குகள் டிசம்பர் 31ல் முடிக்கப்படுகின்றன. முதல் இரண்டு ஆண்டுகளுக்கு குறிப்பேட்டில் பதிவுகள் தந்து இயந்திரக் கணக்கு மற்றும் தேய்மான கணக்கினைத் தயாரிக்கவும்.

### தீர்வு

**குறிப்பு:** சொத்தின் அடக்கம் = வாங்கிய விலை + நிறுவுகைச் செலவு
= 14,000 + 1,000 = ₹ 15,000

### குறிப்பேட்டுப் பதிவுகள்

| தேதி | விவரம் | பற்று ₹ | வரவு ₹ |
|---|---|---|---|
| 2016<br>ஜூலை 1 | இயந்திரக் க/கு ப<br>வங்கி க/கு<br>(இயந்திரம் வாங்கியது) | 14,000 | 14,000 |
| ஜூலை 1 | இயந்திரக் க/கு ப<br>வங்கி க/கு<br>(நிறுவுகைச் செலவு செய்தது) | 1,000 | 1,000 |
| டிசம்பர் 31 | தேய்மானக் க/கு ப<br>இயந்திரக் க/கு<br>(15,000 × 10/100 × 6/12)<br>(தேய்மானம் நீக்கியது) | 750 | 750 |
| டிசம்பர் 31 | இலாப நட்டக் க/கு ப<br>தேய்மானக் க/கு<br>(தேய்மானத் தொகை இலாப நட்டக் கணக்கிற்கு மாற்றியது) | 750 | 750 |
| 2017<br>டிசம்பர் 31 | தேய்மானக் க/கு ப<br>இயந்திரக் க/கு (15,000 × 10/100)<br>(தேய்மானம் நீக்கியது) | 1,500 | 1,500 |
| டிசம்பர் 31 | இலாப நட்டக் க/கு ப<br>தேய்மானக் க/கு<br>(தேய்மானத் தொகை இலாப நட்டக் கணக்கிற்கு மாற்றப்பட்டது) | 1,500 | 1,500 |



Accountancy Ch 10_TM.indd 234 25-01-2020 14:51:09

## பேரேட்டுக் கணக்குகள்

ப **இயந்திரக் கணக்கு** வ

| தேதி | விவரம் | ₹ | தேதி | விவரம் | ₹ |
|---|---|---|---|---|---|
| 2016 ஜூலை 1 | ரொக்கக் க/கு | 15,000 | 2016 டிசம்பர் 31 | தேய்மானக் க/கு | 750 |
| | | | டிசம்பர் 31 | இருப்பு கீ/இ | 14,250 |
| | | 15,000 | | | 15,000 |
| 2017 ஜனவரி 1 | இருப்பு கீ/கொ | 14,250 | 2017 டிசம்பர் 31 | தேய்மானக் க/கு | 1,500 |
| | | | டிசம்பர் 31 | இருப்பு கீ/இ | 12,750 |
| | | 14,250 | | | 14,250 |
| 2018 ஜனவரி 1 | இருப்பு கீ/கொ | 12, 750 | | | |

ப **தேய்மானக் கணக்கு** வ

| தேதி | விவரம் | ₹ | தேதி | விவரம் | ₹ |
|---|---|---|---|---|---|
| 2016 டிசம்பர் 31 | இயந்திரக் க/கு | 750 | 2016 டிசம்பர் 31 | இலாப நட்டக் க/கு | 750 |
| | | 750 | | | 750 |
| 2017 டிசம்பர் 31 | இயந்திரக் க/கு | 1,500 | 2017 டிசம்பர் 31 | இலாப நட்டக் க/கு | 1,500 |
| | | **1,500** | | | **1,500** |

## எடுத்துக்காட்டு 7

ஆனந்த் என்பவர் 1.1.2015 அன்று ₹ 1,00,000 மதிப்புள்ள ஒரு இயந்திரத்தை வாங்கினார். 1.7.2016 அன்று ₹ 50,000 மதிப்புள்ள மற்றொரு இயந்திரத்தை வாங்கினார். மேலும் 1.10.2017 அன்று ₹ 20,000 மதிப்புள்ள மற்றொரு இயந்திரத்தை வாங்கினார். நேர்க்கோட்டு முறையில் 10% தேய்மானம் ஆண்டுதோறும் நீக்கப்பட வேண்டும். 2015 முதல் 2017 வரை இயந்திரக் கணக்கினைத் தயாரிக்கவும். கணக்குகள் ஆண்டுதோறும் டிசம்பர் 31–ல் முடிக்கப் பெறுகின்றன.

### தீர்வு

ப **இயந்திரக் கணக்கு** வ

| தேதி | விவரம் | ₹ | தேதி | விவரம் | ₹ |
|---|---|---|---|---|---|
| 2015 ஜனவரி 1 | வங்கி க/கு | 1,00,000 | 2015 டிசம்பர் 31 | தேய்மானக் க/கு | 10,000 |
| | | | டிசம்பர் 31 | இருப்பு கீ/இ | 90,000 |
| | | 1,00,000 | | | 1,00,000 |
| 2016 ஜனவரி 1 | இருப்பு கீ/கொ | 90,000 | 2016 டிசம்பர் 31 | தேய்மானக் க/கு | 12,500 |
| ஜூலை 1 | வங்கி க/கு | 50,000 | டிசம்பர் 31 | இருப்பு கீ/இ | 1,27,500 |
| | | 1,40,000 | | | 1,40,000 |
| 2017 ஜனவரி 1 | இருப்பு கீ/கொ | 1,27,500 | 2017 டிசம்பர் 31 | தேய்மானக் க/கு | 15,500 |
| அக்டோபர் 1 | வங்கி க/கு | 20,000 | டிசம்பர் 31 | இருப்பு கீ/இ | 1,32,000 |
| | | 1,47,500 | | | 1,47,500 |
| 2018 ஜனவரி 1 | இருப்பு கீ/கொ | 1,32,000 | | | |



Accountancy Ch 10_TM.indd 235 25-01-2020 14:51:09

**குறிப்பு:**

**தேய்மானம்**

2015: 1,00,000 × 10% = 10,000

2016: 1,00,000 × 10% = 10,000
(+) 50,000 × 10% × 6/12 = 2,500 12,500

2017: 1,00,000 × 10% = 10,000
(+) 50,000 × 10% = 5,000
(+) 20,000 × 10% × 3/12 = 500 15,500

## 10.9 விற்ற சொத்தின் மீதான இலாபம் அல்லது நட்டத்தைக் காணுதல்

ஒரு வணிக நிறுவனமானது, சில நேரங்களில் சொத்தினை விற்கலாம். அச்சூழலில், அவ்விற்பனையின் மீதான இலாபம் அல்லது நட்டத்தை கணக்கிட்டு கணக்கில் கொண்டு வருவது அவசியம். விற்பனை நாளன்று சொத்தின் ஏட்டு மதிப்பையும், விற்பனை விலையையும் ஒப்பிட்டுப் பார்த்து, சொத்து விற்றதன் இலாபம் அல்லது நட்டம் கண்டறிய வேண்டும். சொத்தின் ஆரம்ப அடக்க விலையிலிருந்து, சொத்து வாங்கிய நாள் முதல் அல்லது உருவாக்கிய நாள்முதல் சொத்து விற்கும் நாளன்று வரையிலான தேய்மானத்தை கழிப்பதன் மூலம் சொத்தின் ஏட்டு மதிப்பு கணக்கிடப்படுகிறது. விற்பனை விலையானது, சொத்தின் ஏட்டு மதிப்பை விட அதிகமாக இருந்தால், வித்தியாசம் இலாபம் ஆகும். அதே வேளையில், சொத்தின் ஏட்டு மதிப்பு விற்பனை விலையை விட அதிகமாக இருந்தால், வித்தியாசம் நட்டம் ஆகும்.

**ஏட்டு மதிப்பு** = சொத்தின் ஆரம்ப அடக்கவிலை – விற்பனை நாளன்று வரை ஒதுக்கப்பட்ட தேய்மானம்

**விற்பனையில் இலாபம்** = விற்பனை விலை – ஏட்டு மதிப்பு ( விற்பனை விலை > ஏட்டு மதிப்பு )

**விற்பனையில் நட்டம்** = ஏட்டு மதிப்பு – விற்பனை விலை ( விற்பனை விலை < ஏட்டு மதிப்பு )

### எடுத்துக்காட்டு 8

ஜாய் என்ற நிறுவனம் 1.4.2016 அன்று ₹ 75,000–க்கு இயந்திரம் ஒன்றை வாங்கியது. 31.3.2018 அன்று ₹62,000–க்கு அவ்வியந்திரத்தை விற்பனை செய்தது. நிலைத் தவணை முறையில் தேய்மானம் ஆண்டுக்கு 10% நீக்கப்படவேண்டும். ஆண்டுதோறும் கணக்குகள் மார்ச் 31–ல் முடிக்கப்படுகிறது. விற்ற இயந்திரத்தின் மீதான இலாபம் அல்லது நட்டத்தை கணக்கிடுக

### தீர்வு

விற்ற இயந்திரத்தின் மீதான இலாபம் அல்லது நட்டத்தை கணக்கிடல்

| விவரங்கள் | | ₹ |
|---|---|---|
| இயந்திரத்தின் அடக்கவிலை | | 75,000 |
| கழிக்க : 2016–17 க்கான தேய்மானம் | (75,000 × 10%) | 7,500 |
| | | 67,500 |
| கழிக்க : 2017–18 க்கான தேய்மானம் | (75,000 × 10%) | 7,500 |
| விற்ற நாளில் ஏட்டு மதிப்பு | | 60,000 |
| கழிக்க : விற்ற விலை | | 62,000 |
| விற்பனை மீதான இலாபம் | | - 2,000 |

விற்பனை நாளன்று, விற்பனை விலை, ஏட்டு மதிப்பினைக் காட்டிலும் அதிகம். எனவே வேறுபாட்டு தொகை ₹ 2,000 விற்ற இயந்திரத்தின் மீதான இலாபம் ஆகும்.

**மாணவர் செயல்பாடு**

**சிந்தனைக்கு:** தேய்மான கணக்கீட்டு முறை, விற்ற இயந்திரத்தின் மூலம் கிடைக்கும் இலாபம் அல்லது நட்டத்தில் தாக்கத்தை ஏற்படுத்துமா?



Accountancy Ch 10_TM.indd 236 25-01-2020 14:51:09

## எடுத்துக்காட்டு 9

குமார் என்பவர் ஏப்ரல் 1, 2015 அன்று ₹ 80,000 மதிப்புள்ள ஓர் இயந்திரத்தை வாங்கி அதை நிறுவுவதற்கு ₹ 20,000 செலவிட்டார். பயனளிப்பு காலம் 8 ஆண்டுகள் முடிந்தபின், இறுதி மதிப்பு ₹ 4,000 கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. 30 செப்டம்பர் 2017 அன்று அவ்வியந்திரம் ₹ 50,000–க்கு விற்கப்பட்டது. நேர்க்கோட்டு முறையில் தேய்மானம் நீக்கப்படவேண்டும். ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் 31–ல் கணக்குகள் முடிக்கப்படுகிறது எனக்கொண்டு இயந்திர கணக்கு தயாரிக்கவும்.

### தீர்வு

$$\text{ஆண்டுத் தேய்மானத் தொகை} = \frac{\text{சொத்தின் ஆரம்ப அடக்கவிலை} - \text{எதிர்நோக்கும் இறுதிமதிப்பு}}{\text{சொத்தின் எதிர்நோக்கும் பயனளிப்புக் காலம் (ஆண்டுகளில்)}}$$

$$= \frac{1,00,000 - 4,000}{8}$$

$$= ₹\ 12,000$$

$$\text{தேய்மான விகிதம்} = \frac{\text{தேய்மானத் தொகை}}{\text{சொத்தின் ஆரம்ப அடக்கவிலை}}$$

$$= \frac{12,000}{1,00,000} \times 100 = 12\%$$

**குறிப்பு:**

சொத்தின் அடக்கவிலை = வாங்கிய விலை + நிறுவுகைச் செலவு

= 80,000 + 20,000 = ₹ 1,00,000

### பேரேட்டுக் கணக்குகள்

**ப** **இயந்திரக் கணக்கு** **வ**

| தேதி | விவரம் | ₹ | தேதி | விவரம் | ₹ |
|---|---|---|---|---|---|
| 2015 | | | 2015 | | |
| ஏப்ரல் 1 | வங்கி க/கு | 80,000 | டிசம்பர் 31 | தேய்மானக் க/கு (1,00,000 ×12/100 × 9/12) | 9,000 |
| ஏப்ரல் 1 | வங்கி க/கு | 20,000 | டிசம்பர் 31 | இருப்பு கீ/இ | 91,000 |
| | | 1,00,000 | | | 1,00,000 |
| 2016 | | | 2016 | | |
| ஜனவரி 1 | இருப்பு கீ/கொ | 91,000 | டிசம்பர் 31 | தேய்மானக் க/கு (1,00,000 ×12/100) | 12,000 |
| | | | டிசம்பர் 31 | இருப்பு கீ/இ | 79,000 |
| | | 91,000 | | | 91,000 |
| 2017 | | | 2017 | | |
| ஜனவரி 1 | இருப்பு கீ/கொ | 79,000 | செப்டம்பர் 30 | தேய்மானக் க/கு (1,00,000 ×12/100 × 9/12) | 9,000 |
| | | | செப்டம்பர் 30 | வங்கி க/கு | 50,000 |
| | | | செப்டம்பர் 30 | இலாப நட்டக் க/கு | 20,000 |
| | | 79,000 | | | 79,000 |

## எடுத்துக்காட்டு 10

இராம் ஆடை நிறுவனம் ஏப்ரல் 1, 2014 அன்று ₹ 2,00,000 மதிப்புள்ள ஓர் இயந்திரத்தை நிலா நிறுவனத்திடமிருந்து கடனாக வாங்கியது. அதற்கு நிறுவுகைச் செலவாக ₹ 10,000 செலவழித்தது. குறைந்து செல் மதிப்பு முறையில் ஆண்டுக்கு 10% தேய்மானம் நீக்கப்பட்டது. முதல் மூன்று



Accountancy Ch 10_TM.indd 237 25-01-2020 14:51:09

ஆண்டுகளுக்கு இயந்திரக் கணக்கு மற்றும் தேய்மானக் கணக்கினை தயாரிக்கவும். கணக்குகள் ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 31–ல் முடிக்கப் பெறுகின்றன.

**தீர்வு**

## பேரேட்டுக் கணக்குகள்

ப **இயந்திரக் கணக்கு** வ

| தேதி | விவரம் | ₹ | தேதி | விவரம் | ₹ |
|---|---|---|---|---|---|
| 2014 | | | 2015 | | |
| ஏப்ரல் 1 | நிலா நிறுவனக் க/கு | 2,00,000 | மார்ச் 31 | தேய்மானக் க/கு | 21,000 |
| ஏப்ரல் 1 | வங்கி க/கு | 10,000 | | (2,10,000 ×10%) | |
| | | | மார்ச் 31 | இருப்பு கீ/இ | 1,89,000 |
| | | 2,10,000 | | | 2,10,000 |
| 2015 | | | 2016 | | |
| ஏப்ரல் 1 | இருப்பு கீ/கொ | 1,89,000 | மார்ச் 31 | தேய்மானக் க/கு | 18,900 |
| | | | | (1,89,000 ×10%) | |
| | | | மார்ச் 31 | இருப்பு கீ/இ | 1,70,100 |
| | | 1,89,000 | | | 1,89,000 |
| 2016 | | | 2017 | | |
| ஏப்ரல் 1 | இருப்பு கீ/கொ | 1,70,100 | மார்ச் 31 | தேய்மானக் க/கு | 17,010 |
| | | | | (1,70,100 ×10%) | |
| | | | மார்ச் 31 | இருப்பு கீ/இ | 1,53,090 |
| | | 1,70,100 | | | 1,70,100 |
| 2017 | | | | | |
| ஏப்ரல் 1 | இருப்பு கீ/கொ | 1,53,090 | | | |

ப **தேய்மானக் கணக்கு** வ

| தேதி | விவரம் | ₹ | தேதி | விவரம் | ₹ |
|---|---|---|---|---|---|
| 2015 | | | 2015 | | |
| மார்ச் 31 | இயந்திரக் க/கு | 21,000 | மார்ச் 31 | இலாப நட்டக் க/கு | 21,000 |
| | | 21,000 | | | 21,000 |
| 2016 | | | 2016 | | |
| மார்ச் 31 | இயந்திரக் க/கு | 18,900 | மார்ச் 31 | இலாப நட்டக் க/கு | 18,900 |
| | | 18,900 | | | 18,900 |
| 2017 | | | 2017 | | |
| மார்ச் 31 | இயந்திரக் க/கு | 17,010 | மார்ச் 31 | இலாப நட்டக் க/கு | 17,010 |
| | | 17,010 | | | 17,010 |

### எடுத்துக்காட்டு 11

ஒரு நிறுவனம் ஜனவரி 1, 2014 அன்று ₹ 60,000 மதிப்புள்ள இயந்திரத்தை வாங்கியது. ஜுலை 1, 2014 அன்று மற்றொரு இயந்திரத்தை ₹ 50,000–க்கு வாங்கியது. ஜுலை 1, 2015 அன்று, ஜனவரி 1, 2014 அன்று வாங்கிய இயந்திரத்தை ₹ 40,000–க்கு விற்றது. குறைந்து செல் இருப்பு முறையில் தேய்மானம் 10% நீக்கப்பட வேண்டும். ஆண்டுதோறும் கணக்குகள் டிசம்பர் 31–ல் முடிக்கப்பெறுகின்றன எனக்கொண்டு 2014 முதல் 2016 வரை இயந்திரக் கணக்கினை தயாரிக்கவும்.



Accountancy Ch 10_TM.indd 238 25-01-2020 14:51:09

**தீர்வு**

## பேரேட்டுக் கணக்குகள்

**இயந்திரக் கணக்கு**

ப | | | | | வ

| தேதி | விவரம் | ₹ | தேதி | விவரம் | ₹ |
|---|---|---|---|---|---|
| 2014 | | | 2014 | | |
| ஜன 1 | வங்கி க/கு | 60,000 | டிச 31 | தேய்மானக் க/கு * | 8,500 |
| ஜூலை 1 | வங்கி க/கு | 50,000 | டிச 31 | இருப்பு கீ/இ | 1,01,500 |
| | | 1,10,000 | | | 1,10,000 |
| 2015 | | | 2015 | | |
| ஜன 1 | இருப்பு கீ/கொ | 1,01,500 | ஜூலை 1 | தேய்மானக் க/கு | 2,700 |
| | | | ஜூலை 1 | வங்கி க/கு | 40,000 |
| | | | ஜூலை 1 | இலாப நட்டக் க/கு | 11,300 |
| | | | டிச 31 | தேய்மானக் க/கு * | 4,750 |
| | | | டிச 31 | இருப்பு கீ/இ | 42,750 |
| | | 1,01,500 | | | 1,01,500 |
| 2016 | | | 2016 | | |
| ஜன 1 | இருப்பு கீ/கொ | 42,750 | டிச 31 | தேய்மானக் க/கு (42,750 × 10%) | 4,275 |
| | | | டிச 31 | இருப்பு கீ/இ | 38,475 |
| | | 42,750 | | | 42,750 |
| 2017 | | | | | |
| ஜன 1 | இருப்பு கீ/கொ | 38,475 | | | |

***குறிப்பு:**

**1) 2016-க்குரிய தேய்மானத்தொகை**

1.1.2014–ல் இயந்திரம் வாங்கியது: 60,000 × 10% = 6,000

1.7.2014–ல் இயந்திரம் வாங்கியது: 50,000 × 10% × 6/12 = 2,500 ₹ 8,500

**2) 1.7.2015–ல் விற்ற இயந்திர தேய்மானக் கணக்கீடு**

| | |
|---|---|
| இயந்திரத்தின் அடக்கவிலை 1.1.2014 | = 60,000 |
| கழிக்க : தேய்மானம் 2014 (60,000 × 10%) | = 6,000 |
| குறைந்து செல் மதிப்பு 1.1.2015 | 54,000 |
| கழிக்க : தேய்மானம் 2015 1.7.2015 (54,000 × 10% × 6/12) | = 2,700 |
| ஏட்டு மதிப்பு | 51,300 |
| கழிக்க : விற்பனை விலை | 40,000 |
| விற்ற இயந்திரத்தின் மீதான நட்டம் | 11,300 |

**3) 1.7.2014-ல் வாங்கிய இயந்திரத்தின் மீதான 2015 – க்கான தேய்மான கணக்கீடு**

| | |
|---|---|
| இயந்திரத்தின் அடக்கவிலை 1.7.2014 | = 50,000 |
| கழிக்க : தேய்மானம் 2014 (50,000 × 10% × 6/12) | = 2,500 |
| குறைந்து செல் மதிப்பு 1.1.2015 | 47,500 |
| கழிக்க : தேய்மானம் 2015 (47,500 × 10%) | = 4,750 |



Accountancy Ch 10_TM.indd 239 25-01-2020 14:51:09

## நினைவில் கொள்ள வேண்டியவை

- சொத்திற்கு தொடர்புடைய செலவுகளை, அச்சொத்தின் பயனளிப்புக் காலம் முழுவதும் ஒதுக்கீடு செய்யும் செயல்முறை தேய்மானம் என அழைக்கப்படுகிறது.
- சொத்தின் அடக்க விலை என்பது அதன் வாங்கியவிலை மட்டுமல்லாமல் அச்சொத்தின் சோதனை ஓட்டம் மற்றும் பயன்பாட்டிற்குக் கொண்டு வர ஆகும் செலவுகளை உள்ளடக்கியது.
- பழைய சொத்துகளை வாங்கும் போது, அச்சொத்திற்காக ஆரம்பத்தில் செய்த பராமரிப்பு செலவுகளும் அடக்கவிலையில் அடங்கும்.
- நேர்க்கோட்டு முறையில் சொத்தின் ஏட்டு மதிப்பானது அதன் பயனளிப்புக் காலம் முடியும்போது பூஜ்ஜியம் அல்லது அதன் இறுதி மதிப்பிற்கு குறைக்கப்படுகிறது.
- எந்த ஒரு நாளிலும், சொத்தின் ஏட்டு மதிப்பானது சொத்தின் ஆரம்ப அடக்கவிலையிலிருந்து அது பயன்படுத்தப்பட்ட நாள் வரையிலான தேய்மானத்தை கழிப்பதன் மூலம் கணக்கிடப்படுகிறது.
- நிலைச்சொத்தினை விற்பதால் கிடைக்கும் தொகை அதன் ஏட்டு மதிப்பினைவிட அதிகமாக இருந்தால், அக்கூடுதல் தொகை விற்பனை மீதான லாபம் ஆகும்.
- நிலைச்சொத்தின் ஏட்டு மதிப்பு அதன் விற்பனை விலையைவிட அதிகமாக இருந்தால், வேறுபாட்டுத் தொகை, விற்பனை மீதான நட்டம் ஆகும்.

## சுய ஆய்வு வினாக்கள்

MH87UJ

### I சரியான விடையைத் தேர்வு செய்யவும்

1. நேர்க்கோட்டு முறையில் தேய்மானத் தொகையானது,

   (அ) ஆண்டுதோறும் அதிகரிக்கும்

   (ஆ) ஆண்டுதோறும் குறையும்

   (இ) அனைத்து ஆண்டுகளுக்கும் நிலையாக இருக்கும்

   (ஈ) ஆண்டுதோறும் மாறக்கூடியது

2. தேய்மானம் மற்றும் பராமரிப்புச் செலவுகளை கணக்கில் எடுத்துக்கொள்ளும்போது கீழ்க்கண்ட முறைகளில் எது சீரான தாக்கத்தை ஏற்படுத்தும்?

   (அ) நேர்க்கோட்டு முறை (ஆ) குறைந்து செல் இருப்பு முறை

   (இ) ஆண்டுத் தொகை முறை (ஈ) காப்பீட்டு முனைம முறை

3. குறைந்து செல் மதிப்பு முறையில், தேய்மானத் தொகையானது

   (அ) அனைத்து ஆண்டுகளிலும் ஒரே மாதிரியாக இருக்கும்

   (ஆ) ஆண்டுதோறும் குறையும்

   (இ) ஆண்டுதோறும் அதிகரிக்கும் (ஈ) மேற்கூறியவற்றில் எதுவுமில்லை

4. தேய்மானம் எதனால் ஏற்படுகிறது?

   (அ) காலப்போக்கு (ஆ) பயன்பாடு

   (இ) வழக்கொழிவு (ஈ) அ, ஆ மற்றும் இ

5. பின்வரும் எந்த சொத்துகளுக்கு வெறுமையாதல் முறையில் தேய்மானம் நீக்கப்படுகிறது

   (அ) பொறி மற்றும் பொறி இயந்திரம் (ஆ) சுரங்கம் மற்றும் கற் சுரங்கங்கள்

   (இ) கட்டடங்கள் (ஈ) வணிகக்குறி

6. ஒரு சொத்து எதன் காரணமாக வழக்கொழிவு அடைகிறது?

   (அ) காலப்போக்கு (ஆ) தேய்வு மற்றும் உராய்வு

   (இ) தொழில்நுட்ப மாற்றங்கள் (ஈ) மேற்கூறியவற்றில் ஏதுமில்லை

7. சொத்தின் பழுதுபார்ப்பு மற்றும் பராமரிப்புச் செலவுகள் காலப்போக்கில் அதிகரிக்கும் போது பின்வரும் தேய்மான முறைகளுள் எது சிறந்தது?
   (அ) நேர்க்கோட்டு முறை (ஆ) குறைந்து செல் இருப்பு முறை
   (இ) தேய்மான நிதி முறை (ஈ) ஆண்டுத் தொகை முறை
8. சொத்தின் இறுதி மதிப்பு என்பது, பயனளிப்புக் காலத்தின் ______________ அச்சொத்திலிருந்து கிடைக்கும் தொகையாகும்.
   (அ) ஆரம்பத்தில் (ஆ) இறுதியில்
   (இ) மத்தியில் (ஈ) இவைகளில் ஏதுமில்லை
9. எந்நாள் முதற்கொண்டு தேய்மானம் கணக்கிடப்பட வேண்டும்
   (அ) சொத்தினை பயன்பாட்டிற்கு இட்ட நாள்முதல்
   (ஆ) சொத்தினை வாங்குவதற்கான ஆணை பிறப்பித்த நாள்முதல்
   (இ) சொத்தினை வியாபார வளாகத்திற்குள் பெற்ற நாள்முதல்
   (ஈ) சொத்தின் இடாப்பு பெற்ற நாள் முதல்
10. தேய்மான விகிதமானது சமமாக இருக்கும் போது நேர்க்கோட்டு முறைப்படி உள்ள தேய்மானத் தொகை மற்றும் குறைந்து செல் இருப்பு முறையுடன் ஒப்பிடும் போது
   (அ) எல்லா ஆண்டுகளிலும் சமமாக இருக்கும்.
   (ஆ) முதலாண்டில் சமமாகவும், ஆனால், பின்வரும் ஆண்டுகளில் அதிகமாகவும் இருக்கும்.
   (இ) முதலாண்டில் சமமாகவும், ஆனால், பின்வரும் ஆண்டுகளில் குறைவாகவும் இருக்கும்.
   (ஈ) முதலாண்டில் குறைவாகவும், ஆனால், பின்வரும் ஆண்டுகளில் சமமாகவும் இருக்கும்.

**விடை**

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 (இ) | 2 (ஆ) | 3 (ஆ) | 4 (ஈ) | 5 (ஆ) | 6 (இ) | 7 (ஆ) | 8 (ஆ) | 9 (அ) | 10 (ஆ) |

## II மிகக் குறுகிய வினாக்கள்

1. தேய்மானம் என்றால் என்ன?
2. தேய்மானம் கணக்கிடும் முறைகள் யாவை?
3. நேர்க்கோட்டு முறையில் தேய்மானத் தொகை மற்றும் தேய்மான விகிதம் கணக்கிட உதவும் சூத்திரங்கள் யாவை?
4. ஆண்டுத் தொகை முறையில் தேய்மானம் கணக்கிடுதல் என்றால் என்ன?
5. தேய்மான நிதிமுறை என்றால் என்ன?

## III குறுகிய வினாக்கள்

1. தேய்மானம் நீக்க வேண்டியதன் நோக்கங்கள் யாவை?
2. தேய்மானம் ஏற்படுவதற்கான காரணங்கள் யாவை?
3. நேர்க்கோட்டு முறையில் தேய்மானம் கணக்கிடுதலின் நன்மைகள் மற்றும் குறைபாடுகள் யாவை?
4. குறைந்து செல் மதிப்பு முறையின் நன்மைகள் மற்றும் குறைபாடுகளைக் கூறவும்.
5. தேய்மானம் கணக்கிடுதலில் நேர்க்கோட்டு முறை, குறைந்து செல் மதிப்பு முறை இடையே உள்ள வேறுபாடுகளை பட்டியலிடுக.

## IV பயிற்சி வினாக்கள்

### நேர்க்கோட்டு முறை

1. ஒரு நிறுவனம் ₹ 40,000 மதிப்புள்ள இயந்திரத்தை வாங்கியது. நிறுவுதல் செலவாக ₹ 2,000 மேற்கொண்டது. இயந்திரத்தின் எதிர் நோக்கும் பயனளிப்பு காலம் 5 ஆண்டுகள். நேர்க்கோட்டு முறையில் ஆண்டுத் தேய்மானத்தொகையை கணக்கிடுக

(**விடை:** ₹ 8,400)



Accountancy Ch 10_TM.indd 241 25-01-2020 14:51:10

2. ஒரு நிறுமம் ₹ 50,000 மதிப்புள்ள கட்டடம் ஒன்றை வாங்கியது. கட்டடத்தின் பயனளிப்பு காலம் 10 ஆண்டுகள். மேலும் அதன் இறுதி மதிப்பு ₹ 5,000. நேர்க்கோட்டு முறையில் தேய்மானத் தொகை, மற்றும் தேய்மான விகிதம் கணக்கிடுக.

(**விடை**: தேய்மானத் தொகை: ₹ 4,500; தேய்மான விகிதம் 9%)

3. ஜூலை 1, 2016 அன்று, அறைகலன் ₹ 1,00,000 க்கு வாங்கப்பட்டது. அதன் வாழ்நாள் 5 ஆண்டுகள். 5 ஆண்டுகள் முடிவில் அதன் இறுதி மதிப்பு ₹ 10,000. நேர்க்கோட்டு முறையில் தேய்மான விகிதம் காண்க.

(**விடை**: தேய்மானத் தொகை: ₹ 18,000; தேய்மான விகிதம்: 18%)

4. கீழ்க்கண்ட விவரங்களைக் கொண்டு, நேர்க்கோட்டு முறையில் தேய்மான விகிதம் காண்க.

1.1.2018 அன்று ஏற்கனவே பயன்படுத்தப்பட்ட இயந்திரம் வாங்கியது ₹ 38,000
1.1.2018 அன்று பழுது பார்த்தல் செலவு செய்தது ₹ 12,000
இயந்திரத்தின் எதிர் நோக்கும் பயனளிப்பு காலம்: 4 ஆண்டுகள்
எதிர்நோக்கும் இறுதி மதிப்பு ₹ 6,000

(**விடை**: தேய்மானத் தொகை: ₹ 11,000; தேய்மான விகிதம்: 22%)

5. ஜனவரி 1, 2015 அன்று ₹ 4,00,000 மதிப்புள்ள இயந்திரம் வாங்கப்பட்டது. ₹ 15,000 நிறுவுதல் செலவாகவும், ₹ 10,000 வண்டிக் கட்டணமாகவும் செலவழிக்கப்பட்டது. நேர்க்கோட்டு முறையில் ஆண்டுதோறும் 10% தேய்மானம் நீக்கப்படவேண்டும். கணக்குகள் ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 31ல் முடிக்கப்பெறுகின்றன. முதல் இரண்டு ஆண்டுகளுக்கு இயந்திரத்தின் மீதான தேய்மான தொகையைக் கணக்கிடவும்

(**விடை**: தேய்மானத் தொகை: 31-03-2015: ₹ 10,625; 31-03-2016: ₹ 42,500)

6. ஜனவரி 1, 2016 அன்று ₹ 50,000க்கு சொத்து ஒன்று வாங்கப்பட்டது. ஆண்டுதோறும் நேர்க்கோட்டு முறையில் தேய்மானம் நீக்கப்பட வேண்டும். அச்சொத்தின் எதிர்நோக்கும் பயனளிப்பு காலம் 10 ஆண்டுகள் மற்றும் அதன் இறுதி மதிப்பு ₹ 10,000. கணக்குகள் ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் 31ல் முடிக்கப்பெறுகின்றன. தேய்மான விகிதம் கணக்கிட்டு, இரண்டு ஆண்டுகளுக்கு குறிப்பேட்டுப் பதிவுகள் தரவும்.

(**விடை**: தேய்மானத் தொகை: ₹ 4,000; தேய்மான விகிதம்: 8%)

7. கீழ்க்கண்ட விவரங்களைக் கொண்டு, நேர்க்கோட்டு முறையில் இரண்டு ஆண்டுகளுக்கு குறிப்பேட்டுப் பதிவுகள் மற்றும் இயந்திரக் கணக்கு தயாரிக்கவும்.

| | |
|---|---|
| இயந்திரம் வாங்கிய நாள் | 01.01.2016 |
| இயந்திரத்தின் விலை | ₹ 36,000 |
| வண்டிக் கட்டணம் | ₹ 2,500 |
| நிறுவுதல் செலவு | ₹ 1,500 |

இயந்திரத்தின் வாழ்நாள் 5 ஆண்டுகள்

(**விடை**: தேய்மானத் தொகை: ₹ 8,000; இயந்திரக் கணக்கு இருப்பு: ₹ 24,000)

8. ஒரு தயாரிப்பு நிறுமம், ஏப்ரல் 1, 2010 அன்று பொறி வகை மற்றும் இயந்திரம் ₹ 4,50,000க்கு வாங்கி, நிறுவுதல் செலவாக ₹ 50,000 செலவழித்தது. மூன்று ஆண்டுகள் பயன்படுத்திய பிறகு, அச்சொத்தானது ₹ 3,85,000 க்கு விற்கப்பட்டது. தேய்மானம் ஆண்டுதோறும் 15% நிலைத் தவணை முறையில் நீக்கப்பட வேண்டும். ஒவ்வொரு ஆண்டும் கணக்குகள் மார்ச் 31–ல் முடிக்கப்படுகின்றன. விற்ற இயந்திரத்தின் மீதான இலாபம் அல்லது நட்டத்தைக் கணக்கிடவும்.

(**விடை**: விற்பனை மீதான இலாபம்: ₹ 1,10,000)



Accountancy Ch 10_TM.indd 242 25-01-2020 14:51:10

9. சுதா நிறுமம் ஏப்ரல் 1, 2008 அன்று ₹ 64,000 மதிப்புள்ள இயந்திரம் வாங்கியது. இயந்திரத்தை நிறுவுவதற்காக ₹ 28,000 செலவு செய்தது. ஆண்டுக்கு 10% தேய்மானம் நேர்க்கோட்டு முறையில் கணக்கிட வேண்டும். இயந்திரம் பயனற்றுப்போனதால் 30 ஜுன் 2010 அன்று ₹ 52,000 க்கு விற்கப்பட்டது. ஒவ்வொரு ஆண்டும் கணக்குகள் டிசம்பர் 31ல் முடிக்கப்பெறுகின்றன. இயந்திரக் கணக்கினைத் தயாரிக்கவும்.

(**விடை:** விற்ற இயந்திரத்தின் மீதான நட்டம்: ₹ 19,300)

10. ஏப்ரல் 1, 2014 அன்று இராகுல் இயந்திரம் ஒன்றை ₹ 2,00,000 க்கு வாங்கினார். அக்டோபர் 1, 2015 அன்று மற்றொரு இயந்திரத்தை ₹ 1,20,000 க்கு வாங்கினார். செப்டம்பர் 30, 2016 அன்று, ஏப்ரல் 1, 2014 அன்று வாங்கிய இயந்திரத்தை ₹ 1,20,000 க்கு விற்றார். ஒவ்வொரு ஆண்டும் கணக்குகள் மார்ச் 31ல் முடிக்கப்பெறுகின்றன. ஆண்டுக்கு 10% தேய்மானம் நேர்க்கோட்டு முறையில் நீக்கப்பட வேண்டும். 2014 – 15 லிருந்து 2016 – 2017 வரை மூன்று ஆண்டுகளுக்கான இயந்திர கணக்கு மற்றும் தேய்மானக் கணக்கு தயாரிக்கவும்.

(**விடை:** தேய்மானத் தொகை: 2014-15: ₹ 20,000; 2015-16: ₹ 26,000; 2016-17: ₹ 22,000; முதல் இயந்திரம் விற்றதில் நட்டம்: ₹ 30,000; இயந்திரக் கணக்கில் இருப்பு: ₹ 1,02,000).

## குறைந்து செல் மதிப்பு முறை

11. நிலைச் சொத்து ₹ 50,000க்கு வாங்கப்பட்டது. தேய்மான விகிதம் ஆண்டுக்கு 15%. குறைந்து செல் இருப்பு முறையில் இரண்டு ஆண்டுகளுக்கு தேய்மானத் தொகை கணக்கிடவும்.

(**விடை:** தேய்மானத் தொகை: முதல் ஆண்டு ₹ 7,500; இரண்டாம் ஆண்டு ₹ 6,375)

12. ஜனவரி 1, 2015 அன்று வெளிநாட்டிலிருந்து கொதிகலன் ஒன்று ₹ 10,000க்கு வாங்கப்பட்டது. கப்பல் ஏற்றுக்கட்டணம் ₹ 2,000, இறக்குமதி வரி ₹ 7,000 மற்றும் நிறுவுதல் செலவிற்காக ₹ 1,000 செலவிடப்பட்டது. குறைந்து செல் இருப்பு முறையில் ஆண்டுக்கு 10% தேய்மானம் எனக் கொண்டு முதல் மூன்று ஆண்டுகளுக்கு தேய்மானத் தொகை கணக்கிடவும். கணக்குகள் ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் 31ல் முடிக்கப்பெறுகின்றன.

(**விடை:** தேய்மானத் தொகை: 2015: ₹ 2,000; 2016: ₹ 1,800; 2017: ₹ 1,620)

13. 1.1.2016 அன்று ₹ 5,000 மதிப்புள்ள அறைகலன் ஒன்று வாங்கப்பட்டது, நிறுவுதல் செலவுகள் ₹ 1,000. குறைந்து செல் இருப்பு முறையில் ஆண்டுதோறும் 10% தேய்மானம் ஒதுக்க வேண்டும். முதல் இரண்டு ஆண்டுகளுக்கு குறிப்பேட்டில் பதிவுகள் தருக.

(**விடை:** தேய்மானத் தொகை : முதல் ஆண்டு ₹ 600; இரண்டாம் ஆண்டு ₹ 540)

14. ஏப்ரல் 1, 2015 அன்று ஒரு நிறுவனம் ₹ 50,000 மதிப்புள்ள இயந்திரம் ஒன்றை வாங்கியது. அதன் வாழ்நாள் 6 ஆண்டுகள். குறைந்து செல் மதிப்பு முறையில் ஆண்டுதோறும் 30% தேய்மானம் நீக்கப்படவேண்டும். ஒவ்வொரு ஆண்டும் கணக்குகள் டிசம்பர் 31 – ல் முடிக்கப்பெறுகின்றன. ஏப்ரல் 1, 2015 முதல் மூன்று ஆண்டுகளுக்கு இயந்திரக் கணக்கு மற்றும் தேய்மானக் கணக்கு தயாரிக்கவும்.

(**விடை:** தேய்மானத் தொகை: 2015: ₹ 11,250; 2016: ₹ 11,625; 2017: ₹ 8,138; 31-12-17 அன்று இயந்திரக் கணக்கு இருப்பு: ₹ 18,987)

15. இலக்குமி போக்குவரத்து நிறுவனம், அக்டோபர் 1, 2014 அன்று ₹ 8,00,000க்கு கனரக வாகனம் ஒன்றை வாங்கியது. குறைந்து செல் மதிப்பு முறையில் ஆண்டுதோறும் 15% தேய்மானம் நீக்கவேண்டும். 31 மார்ச் 2017ல் அக்கனரக வாகனம் ₹ 5,00,000க்கு விற்கப்பட்டது. ஒவ்வொரு ஆண்டும் கணக்குகள் மார்ச் 31ல் முடிக்கப்பெறுகின்றன. விற்ற வாகனத்திற்கான இலாபம் அல்லது நட்டத்தினைக் கணக்கிடவும்.

(**விடை:** தேய்மானத் தொகை: 2014-15: ₹ 60,000; 2015-16: ₹ 1,11,000; 2016-2017: ₹ 94,350; விற்ற வாகனத்தின் மீதான நட்டம்: ₹ 34,650)



Accountancy Ch 10_TM.indd 243 25-01-2020 14:51:10

16. ஜனவரி 1, 2014 அன்று இராஜ் நிறுவனம் ₹ 90,000 மதிப்புள்ள இயந்திரத்தை வாங்கியது. ஜூலை 1, 2014 அன்று, மற்றொரு இயந்திரத்தை ₹ 60,000க்கு வாங்கியது. ஜனவரி 1, 2015 அன்று ஜனவரி 1, 2014ல் வாங்கிய இயந்திரத்தை ₹ 40,000க்கு விற்பனை செய்தது. குறைந்து செல் மதிப்பு முறையில் ஆண்டுக்கு 10% தேய்மானம் நீக்கப்பட வேண்டும். கணக்குகள் ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் 31ல் முடிக்கப்படுகிறது. இயந்திரக் கணக்கினை 2014 மற்றும் 2015 ஆண்டுகளுக்கு தயாரிக்கவும்.

(**விடை:** தேய்மானத் தொகை: 2014: ₹ 12,000; 2015: ₹ 5,700;
விற்ற இயந்திரத்தின் மீதான நட்டம்: ₹ 41,000;
இயந்திரக் கணக்கு இருப்பு: 31-12-14 ₹ 1,38,000; 31-12-15 ₹ 51,300).

**நிகழ்வாய்வு**

லக்கி நிறுவனத்தின் வருமான அறிக்கை ₹ 3,000 நட்டம் காண்பிக்கிறது. வணிக நிறுவனம் நட்டம் அடைந்ததால் அதன் உரிமையாளர் தேய்மானம் ஒதுக்க வேண்டிய அவசியம் இல்லை என நினைக்கிறார். மேலும், அவர் தன்னுடைய கணக்காளரிடம் அடுத்த ஆண்டிற்கு நட்டத்தை தவிர்ப்பதற்காக, தேய்மான முறையை மாற்றியமைக்க ஆலோசனை வழங்குகிறார். ஆனால், கணக்காளர், அவரது ஆலோசனைப்படி தேவையான மாற்றங்களை கொண்டுவர தயக்கம் காட்டுகிறார்.

இச்சூழலில்

பின்வரும் கருத்துகள் குறித்து விவாதிக்கவும்:

- வணிக நிறுவனத்திற்கு நட்டம் ஏற்பட்ட நிலையில், தேய்மானம் ஒதுக்க வேண்டிய தேவையில்லை என்பதை ஏற்றுக்கொள்கிறீர்களா?
- கணக்காளர், வணிக உரிமையாளர் கூறிய மாற்றங்களைக் கொண்டுவர ஏன் தயங்குகிறார்?
- கணக்காளர், உரிமையாளரின் ஆலோசனைப்படி மாற்றங்களை மேற்கொண்டார் எனில், எவ்வித கணக்கியல் கோட்பாடுகளைப் பின்பற்றியிருக்க மாட்டார்?
- வணிக நிறுவனத்தின் நட்டத்திற்கு தேய்மானம் ஒதுக்குவது ஒன்று மட்டும் தான் காரணம் என நினைக்கிறீர்களா?

## தொடர் ஆய்விற்கு

பழைய நிலைச் சொத்தினை புதிய ஒன்றுடன் பரிமாற்றம் செய்ய வாய்ப்பு உள்ளதா? அத்தகைய சூழலில் பணம் செலுத்தும் போது ஏற்படும் சரிகட்டுதல் மற்றும் கணக்கியல் முறை குறித்து என்ன நினைக்கிறீர்கள்?

## பார்வை


1. M C Shukla, T S Grewal and S C Gupta, Advanced Accounts, 19th ed., 2017, S.Chand Publishing, New Delhi.
2. R L Gupta and V K Gupta, Financial Accounting, 11th ed., 2014, Sultan Chand and Sons, New Delhi.
3. S P Jain and K L Narang, Advanced Accountancy Vol – I, 2016, Kalyani Publishers, New Delhi.
4. Dalston L Cecil and Jenitra L Merwin, Financial Accounting, 3rd ed., 2017, Learntech Press, Trichy.
5. Fundamentals of Accounting, 2017, The Institute of Chartered Accountants of India, New Delhi.